# உதயன்

விலை ரூபா 6-00

சுடர் 13 வள்ளுவர் ஆண்டு 2028 கார்த்திகை 15 ஞாயிற்றுக்கிழமை 30-11-1997 UTHAYAN A Lively National Tamil Daily கதிர் 03


# உண்ணாவிரதம் இருந்த கைதிகள் களுத்துறைச் சிறைக்கு இடமாற்றம்!

## பலவந்தமாக 4 பஸ்களில் ஏற்றிச் செல்லப்பட்டனர்!!

கொழும்பு, நவம்பர் 30

**கொழும்பு மகஸீன் சிறையில் கடந்த வியாழன் முதல் உண்ணாவிரதம் இருந்து வந்த 223 தமிழ் அரசியல் கைதிகளும் நேற்று நண்பகல் பலவந்தமாக களுத்துறை சிறைச் சாலைக்கு இட மாற்றம் செய்யப்பட்டனர்.**

பயங்கரவாதத் தடுப்புச் சட்டத்தின் கீழ் தடுத்துவைக்கப்பட்டுள்ள இவர்கள் தாங்கள் விடுதலை செய்யப்பட வேண்டும் அல்லது நீதி விசாரணைக்கு உட்படுத்தப்பட வேண்டும் என்ற கோரிக்கையை முன்வைத்து இந்த உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தது தெரிந்ததே.

உண்ணாவிரதம் இருந்த கைதிகளில் ஒரு சிலர் நேற்று சிறைச்சாலையின் கூரைமேல் ஏறி நின்று சத்தியாக்கிரகம் செய்தனர். இதனால் சிறைச் சாலைக் கூரைகள் சேதமடைந்தன என்று தெரிவிக்கப்பட்டது.

சிறைச்சாலை அதிகாரிகள் கூரையிலிருந்து இறங்குமாறு கேட்டுக்கொண்ட போதிலும் இவர்கள் கூரையிலிருந்து இறங்க மறுத்தனர். இதனை அடுத்து வெலிக்கடை பொலீஸார் வரவழைக்கப்பட்டு இவர்கள் பலவந்தமாக இறக்கப்பட்டனர்.

பின்னர் இவர்கள் நான்கு பஸ்களில் ஏற்றப்பட்டு களுத்துறை சிறைச்சாலைக்கு கொண்டு செல்லப்பட்டனர் என்று தெரியவருகிறது.

## உறவினர்கள் அழுது புலம்பினர்!

### பத்திரிகையாளரின் படச்சுருள் பொலீஸாரினால் பறிப்பு

கொழும்பு, நவ. 30

உண்ணாவிரதப் போராட்டம் நடத்திய தமிழ் அரசியல் கைதிகள் நேற்று பலவந்தமாக பஸ்களில் ஏற்றி களுத்துறைச் சிறைக்கு அனுப்பப்பட்ட சமயம் மகஸீன் சிறைக்கு வெளியே கூடிநின்ற அவர்களின் உறவினர்கள் அழுது புலம்பினர்.

கைதிகள் பஸ்களில் ஏற்றி அனுப்பப்பட்டதையும், அவர்களின் உறவினர்கள் அழுது புலம்புவதையும் படம் எடுத்ததாகக் கூறப்படும் வீரகேசரி பத்திரிகையின் படப்பிடிப்பாளர் எஸ். சுரேந்திரனின் கமெரா பொலீஸ் அதிகாரி ஒருவரினால் பறிக்கப்பட்டதாகவும்—

அதில் இருந்த பிலிம் சுருள் அகற்றப்பட்ட பின் கமெரா

(8 ஆம் பக்கம் பார்க்க)

## கப்பல் சேவை

யாழ்ப்பாணம், நவ. 30

காங்கேசன் துறையில் இருந்து திருகோணமலைக்கு 700 பயணிகளுடன் இன்று கப்பல் சேவை இடம்பெறவிருப்பதாக யாழ். சிவில் நிர்வாக அலுவலகம் அறிவித்துள்ளது.

பட்டியல் இலக்கம் 571க்கும் 606க்கும் இடைப்பட்ட பட்டியலில் உள்ளோர் இன்று காலை 8 மணிக்கு யாழ். ரயில் நிலையத்துக்கு சமுகமளிக்குமாகுமாறு கேட்கப்பட்டுள்ளனர். (ஐ)

## இரணைதீவுப் பகுதியில் இந்திய மீனவர் சடலங்கள்

வவுனியா, நவ. 30

இரணைதீவுப் பகுதியில் நான்கு இந்திய மீனவர்களின் சடலங்கள் கரையொதுங்கியதாக வன்னிச்செய்திகள் தெரிவித்தன.

கடந்த 16 ஆம் திகதி இராமேஸ்வரத்திலிருந்து மீன் பிடிப்பதற்காகச் சென்ற நான்கு மீனவர்கள் திரும்பிவரவில்லை என்றும் —

அவர்களைத் தேடிச் சென்ற இந்திய மீனவர்கள் இரணைதீவுக் கடற்பகுதியில் துப்பாக்கிச் சூட்டுக் காயங்களுடன் காணப்பட்ட மேற்படி மீனவர்களின் சடலங்களை எடுத்துச் சென்றனர் என்றும் — தெரிவிக்கப்பட்டது.

(இ-5-164)

## ரயில் விபத்தில் மூவர் பலி!

கொழும்பு, நவ. 30

அனுராதபுரத்திலிருந்து நேற்றுக் காலை மாத்தறை நோக்கிப் புறப்பட்ட ''ரஜரட்ட ரஜனி'' ரயில் விபத்தில் சிக்கியதில் 10 வயதுச்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## அடுத்த நடவடிக்கை குறித்து ஜனாதிபதி தீவிர ஆலோசனை

### இந்தியாவில் மாற்று அரசு அல்லது பொதுத்தேர்தல்

புதுடில்லி, நவ. 30

இந்தியப் பிரதமர் இந்தர் குமார் குஜ்ரால் தமது அமைச்சரவையின் இராஜினாமாக் கடிதத்தை ஜனாதிபதி கே. ஆர். நாராயணனிடம் சமர்ப்பித்ததைத் தொடர்ந்து இப்போதுள்ள நிலைமை பற்றி ஜனாதிபதி நாராயணன் சட்ட வல்லுனர்களுடனும் அரசியல் கட்சிகளுடனும் பேச்சு நடத்தி வருகிறார்.

பாரதிய ஜனதாக்கட்சி உத்தரப்பிரதேசத்தில் செய்தது போன்று நாடாளுமன்றத்திலும் உறுப்பினர்களைக் கட்சி மாறச் செய்து பெரும்பான்மையை எட்டி அரசை அமைக்க தீவிர நடவடிக்கை எடுத்து வருகின்றது. இதற்கான நடவடிக்கைகளைமேற்கொள்ளும் அதிகாரம் கட்சித் தலைவர் அத்வானியிடம் எதிர்க்கட்சித் தலைவர் அடல் பிஹாரி வாஜ்பாயினால் விடப்பட்டுள்ளது.

இதேவேளை— காங்கிரஸ் கட்சித் தலைவர் சீதாராம் கேசரி தானே அரசை அமைக்கப்போவதாகக் கூறியிருக்கின்றார். [illegible] கட்சிக்கு தன்னுடைய பலத்

(8 ஆம் பக்கம் பார்க்க)

## 4 பெண்கள் உட்பட 15 பேர் நீர்கொழும்பில் தடுத்துவைப்பு

கொழும்பு, நவ. 30

நீர்கொழும்புப் பகுதியில் நேற்றுக் காலை முதல் நண்பகல் வரை பொலீஸாரும் இராணுவத்தினரும் கூட்டாக சுற்றிவளைப்பு தேடுதல் நடவடிக்கைகளில் ஈடுபட்டனர்.

ஆண்கள், பெண்கள் உட்பட சுமார் 2 ஆயிரத்து 500 தமிழர்கள் சோதனைக்கு உட்படுத்தப்பட்டனர்.

4 பெண்கள் உட்பட 15 பேர் விசாரணைக்காகத் தடுத்துவைக்கப்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டது.

விடுதலைப் புலிகளின் ஊடுருவல் குறித்து கிடைத்த தகவல்களையடுத்தே தேடுதல் நடத்தப்பட்டதாகப் பாதுகாப்பு தரப்பு தெரிவித்தது.

(இ-21)

## யாழ். நகரப்பகுதி நேற்று வழமை நிலைக்கு திரும்பியது

### லொறிகள் உள்ளே அனுமதிக்கப்பட்டன

யாழ்ப்பாணம், நவ. 30

மாவீரர் வாரத்தையொட்டி பலப்படுத்தப்பட்ட பாதுகாப்பு நடவடிக்கைகள் நேற்று தளர்த்தப்பட்டு லொறிகள் நகருக்குள் செல்ல அனுமதிக்கப்பட்டன.

லொறிகளை நகருக்குள் அனுமதிப்பது கடந்த மூன்று நாள்களாக கட்டுப்படுத்தப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்பட்டது.

யாழ். அரச அதிபர் கே. சண்முகநாதன் யாழ். சிவில் நிர்வாக பிரதம இணைப்பாளர் பிரிகேடியர் திலகரட்ண வுடன் தொடர்பு கொண்டதையடுத்து நேற்று நண்பகலுக்குப் பின்னர் லொறிகள் நகருக்குள் நுழைவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளன என்று தெரிவிக்கப்பட்டது.

(இ-5-9)

அரசின் தீர்வு யோசனை:

## ஐ.தே.க. எம்.பிக்களின் கருத்து தனித்தனியாக கோரப்படுகிறது

கொழும்பு, நவ. 30

அரசாங்கத்தினால் முன்வைக்கப்பட்டுள்ள இனப்பிரச்சினைத் தீர்வு தொடர்பான அரசமைப்புத் திருத்தம் குறித்து ஐ.தே.க. நாடாளுமன்ற உறுப்பினர்களிடமிருந்து தனித்தனியாகக் கருத்துக்கள் திரட்டப்படும்.

நேற்று முன்தினம் நடைபெற்ற ஐ.தே.க. தேசிய நல்லிணக்கக்குழுக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டது.

டிரோன் பெர்னாண்டோ தலைமையில் நல்லிணக்கக் குழு கூடியது.

எதிர்வரும் செவ்வாய்க்கிழமை முதல் கருத்துக்கள் திரட்டப்படும் என்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தனியாக மட்டுமன்றி குழுவாகவும் கருத்துக்களைச் சமர்ப்பிக்க முடியும் என்றும் ஐ.தே.க. தரப்பினரால் தெரிவிக்கப்பட்டது.

(இ-21)

இனப்பிரச்சினைக்குத் தீர்வுகோரி

## உண்ணாவிரதம் இருந்த தமிழ் இளைஞன் கைது!

கொழும்பு, நவ. 30

இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணுமாறு கோரி சாகும் வரை உண்ணாவிரதம் இருக்க முயன்ற ஒரு தமிழ் இளைஞர் கைது செய்யப்பட்டுள்ளார்.

தமிழ் மக்களும், சிங்கள மக்களும் பிரிந்திருந்து ஒருவருக்கொருவர் சண்டையிடுகின்றனர். எனவே இந்தப் பிரச்சினைக்குத் தீர்வுகாண தாம் சாகும்வரை உண்ணாவிரதம் இருக்கப்போவதாக இவர் அறிவித்திருந்தார்.

கதிர்காமம் திரிவிகாரைக்கு அருகே உண்ணாவிரதம் இருக்க முயன்ற கோபாலச்சந்திரன் என்ற இளைஞரை அம்பாந்தோட்டைப் பொலீஸார் கைது செய்து விளக்கமறியலில் வைத்துள்ளனர்.

(இ-5)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கொதித்து ஆறிய நீரையே பருகுமாறு ஆலோசனை

கொழும்புத்துறை, நவ. 30

தற்போது மழை காலம் ஆரம்பித்திருப்பதால்தொற்று நோய்கள் பரவக்கூடும் என்றும்—

எனவே கொதித்து ஆறிய தண்ணீரை அருந்தும் படியும் யாழ். மாநாகசபை சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் பொது மக்களை அறிவுறுத்தியுள்ளார்.

அசுத்தநீரினால் வாந்திபேதி, கொலரா, காய்ச்சல், மலேரியாபோன்ற நோய்கள் பரவும்.

இவற்றை வராமல் தடுப்பதற்கு மக்கள் சுகாதாரப் பழக்கவழக்கங்களைக் கையாள வேண்டும்.

குடிதண்ணீரை கொதித்து ஆறிய பின்னர் பருகுதல் வேண்டும்-

சாப்பாட்டுக்கடைகள், இல்லங்கள் தோறும் உணவுப் பண்டங்களில்ஈக்கள் மொய்க்காதவாறு அவற்றைமூடி வைத்தல் வேண்டும்.

மலம் கழித்த பின்னர் சவர்க்காரம் போட்டு கைகளைக் கழுவுதல் வேண்டும்.

இவ்வாறு மக்களை அவர் அறிவுறுத்தியுள்ளார். (ஐ-30)

# கொழும்புத்துறைப் பகுதியில் 117 பேருக்கு ரூபா 5,000

கொழும்புத்துறை, நவ. 30

கொழும்புத்துறை(ஜே-62) இராம சேவையாளர் பிரிவில் மீளக்குடியமர்ந்த குடும்பங்களுக்கான ரூபா 5 ஆயிரம் கொடுப்பனவு இரண்டாவது கட்டமாக 117 குடும்பங்களுக்கு வழங்கப்படவுள்ளது.

கொழும்புத்துறை பிரதான வீதியில் உள்ள ஜே-62 கிராம சேவையாளர் பணிமனையில் வைக்கப்பட்டிருக்கும் பெயர்ப் பட்டியலில் பெயர் உள்ளவர்கள் தத்தமது பங்கீட்டு அட்டை, வங்கிப் புத்தகம், தேசிய அடையாள அட்டை, ஐந்து ரூபா முத்திரை என்பனவற்றுடன் அலுவலக நேரத்தில் நேரில் தம்மைச் சந்திக்குமாறு கிராம சேவையாளர் எஸ். தேவராசா தெரிவித்துள்ளார். (ஐ-30)

## நியமனம்

கொழும்புத்துறை, நவ.30

ஊர்காவற்றுறை பிரதேச செயலர் பிரிவின் கிராம அபிவிருத்தி உத்தியோகத்தராக திருமதி சுனேத்ரா சுதாகர் வடகிழக்கு மாகாண கிராம அபிவிருத்தித் திணைக்களத்தால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் யாழ். பல்கலைக்கழக பொருளியல் சிறப்புப் பட்டதாரி ஆவார். (ஐ-30)

# ஹோம் பினான்ஸ் வைப்பீட்டில் மீளளிப்பு

ஹோம் பினான்ஸ் லிமிட்டெட்டில் பணம் வைப்புச் செய்து ஏற்கனவே அரைவாசித் தொகையினைப் பெற்றவர்களுக்கு மிகுதியில் பத்து வீத மீளளிப்புத் தொகை இப்பொழுது வழங்கப்பட்டு வருகிறது.

இதற்கான காசோலைகள் கொள்ளுப்பிட்டி, 463, காலி வீதியிலுள்ள அதன் தலைமை அலுவலகத்தில் வைத்து இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்டு வருகிறது.

மேற்படி வங்கி வைப்பீட்டாளர்களில் பலரும் இடம் பெயர்ந்து தற்போது வெவ்வேறு இடங்களில் வாழ்ந்து வருவதால் அவர்களுடன் தொடர்பு கொள்ள முடியாதிருப்பதாகவும், அவர்களாகத் தம்முடன் தொடர்பு கொண்டு இக்கொடுப்பனவைப் பெற்றுக்கொள்ள முடியும் என்று மத்திய வங்கியால் இந்நிதி வழங்கலுக்குப் பொறுப்பாக நியமிக்கப்பட்டுள்ள திரு. யேசுதாசன் தெரிவித்தார்.

இது விடயமாகத் தொடர்பு கொள்ளும் போது சம்பந்தப்பட்டவர்கள் தங்களது தற்போதைய முகவரி, வைப்புச் சான்றிதழ் இலக்கம், முதலாம் கட்ட மீளளிப்பு வழங்கப்பட்ட போது அவர்களுக்கு ஒதுக்கப்பட்ட இலக்கம் என்பவைகளைக் குறிப்பிட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (அ)

## விவரம் சேகரிப்பு

செம்பியன்பற்று, நவ. 30

வடமராட்சி கிழக்கு மருதங்கேணி பிரதேச செயலகத்தினால் இப் பகுதியில் உள்ள கிராமசேவகர் பிரிவுகள் தோறும் அங்கவீனர்கள், ஊனமடைந்தோர், காணாமற்போனோர், வன்செயலால் பாதிக்கப்பட்டோர் போன்றவர்களின் விவரங்கள் திரட்டப்பட்டு வருகின்றன.

# கண்ணீர் அஞ்சலி

யாழ்ப்பாணம் பலநோக்குக் கூட்டுறவுச்சங்க பணியாளர்

திரு. பி.ஏ. கொக்றல்

அவர்களின் தந்தையார்

## அமரர் த. பாக்கியநாதன்

(மிருதங்க வித்துவான்)

அவர்களின் மறைவு குறித்து அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

பொது முகாமையாளர்,
தலைவர், நெறியாளர் குழு,
யாழ்ப்பாணம் ப.நோ.கூ. சங்கம்,

கூட்டுறவு ஊழியர் தொழிற்சங்கம்,
யாழ். பட்டணக் கிளை.

(51492)

# வலிகாமம் வடக்கு பிரதேசசபை, காங்கேசன்துறை.

# கேள்வி அறிவித்தல் - 1998

## சந்தைகள், இறைச்சிக் கடைகள்

01-01-1998 முதல் 31-12-1998 வரையான காலப் பகுதிக்கு குத்தகைக்கான கேள்விகள் 15-12-1997 ஆம் திகதி நண்பகல் 12 00 மணி வரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். கேள்விப் பத்திரங்கள் 12-12-1997 ஆம் திகதி நண்பகல் 12.00 மணி வரை வலிகாமம் வடக்கு பிரதேசசபை, தலைமை அலுவலகம், மல்லாகத்தில் உரிய கட்டணங்களைச் செலுத்துவதன் மூலம் பெற்றுக் கொள்ளலாம். கேள்விகள் 15-12-1997 ஆம் திகதி பிற்பகல் 2-00 மணிக்கு திறக்கப்படும். இதர விவரங்கள் அலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.

### அட்டவணை

| குத்தகை விவரம் | ஆகக் குறைந்த கேள்வித் தொகை | கேள்வி பிணைப் பணம் (மீளளிக்கக் கூடியது) | கேள்வி பத்திரப் பணம் (மீளளிக்க முடியாதது) |
|---|---|---|---|
| மல்லாகம் உப அலுவலகம் | | | |
| 1. மல்லாகம் மீன் மரக்கறிச் சந்தை | 4200.00 | 500.00 | 100.00 |
| 2. மல்லாகம் மாட்டிறைச்சிக் கடை (மாதவாடகை ரூபா. 100.00) | 57000.00 | 1000.00 | 100.00 |
| 3. மல்லாகம் ஆட்டிறைச்சிக்கடை (மாதவாடகை ரூபா. 100.00) | 13000.00 | 1000.00 | 100.00 |
| 4. அளவெட்டி மலை வேம்படிச் சந்தை (மீன், மரக்கறி) | 3600.00 | 500.00 | 100.00 |

நா. வேதநாயகன்
விசேட ஆணையாளர்,
வலிகாமம் வடக்கு பிரதேச சபை.

வலிகாமம் வடக்குப் பிரதேச சபை,
காங்கேசன்துறை, மல்லாகம்,
1997-11-27.

(சி-2216)

# சமய சந்நிதிகளில்

வலிகாமம் தெற்கு, நவ. 30

பல ஆண்டுகளுக்குப் பின்னர் புனரமைப்புச் செய்யப்பட்ட நயினாதீவு வீரபத்திரர் ஆலய மகாகும்பாபிஷேகம் கடந்த திங்கட்கிழமை சிறப்பாக நடைபெற்றது.

நயினை ஸ்ரீலஸ்ரீ மகேஸ்வரக் குருக்கள் தலைமையில் நடைபெற்ற இந் நிகழ்வில் நல்லை ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த சோமசுந்தர பரமசாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினார்.

கும்பாபிஷேகம் தொடர்பான விசேட மலர் ஒன்றும் வெளியிடப் பட்டது.

நூற்றுக்கணக்கான அடியார்கள் இந் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

(ஐ-152)

★ ★ ★

கொழும்புத்துறை மன்றுளாடும் அருள்மிகு ஸ்ரீ விநாயகர் ஆலயம், கொக்குவில் ஸ்ரீ மனோன்மணி அம்பாள் ஆலயம், நல்லூர் ஸ்ரீ சிவன் கோயில், நல்லூர் ஸ்ரீ கந்தசாமி ஆலயம், தொல்புரம் வழக்கம்பரை ஸ்ரீ மகா மாரி அம்மன் ஆகிய ஆலயங்களில் பிரதி திங்கட்கிழமை தோறும் மாலை சோமவார விசேட பூசை ஆராதனை வழிபாடுகள் இடம்பெற்று வருகின்றன.

★ ★ ★

திருநெல்வேலி ஆடியபாத வீதியில் உள்ள புனித பிரான்சிஸ் சவேரியார் ஆலயத்தில் திருநாள்கள் நடைபெறுகின்றன. நாளை மறுதினம் செவ்வாய்க்கிழமை மாலை 4.30 மணிக்கு திவ்விய நற்கருணை விழாவும் மறுநாள் புதன் கிழமை காலை 7.15 மணிக்கு திருநாள் பெருவிழாப் பலி பூஜையும், திருச்சொரூப சுற்றுப் பிரகாரமும் நடைபெறும். (ஐ-30)

★ ★ ★

கொழும்புத்துறை ஆத்தியம் பதி அருள்மிகு ஸ்ரீ சந்திர சேகரர் விநாயகர் ஆலயத்தில் பிரதி திங்கட்கிழமை தோறும் மாலை 4.30 மணிக்கு கார்த்திகை சோமவார விசேட பூசை வழிபாடுகள் நடைபெற்று வருகின்றன.

# மரண அறிவித்தல்கள்

## தம்பையா சின்னத்துரை

நீர்வேலி வடக்கைச் சேர்ந்த தம்பையா சின்னத்துரை 29-11-97 இல் காலமானார்.

இவர் நாகேஸ்வரியின் அன்புக் கணவரும், விஜயலக்சுமி, விஜயநந்தினி (ஆசிரியை, சண்முகா வித்தியாலயம், திருகோணமலை), செந்தில்நாதன் (கனடா), வரதராசன் (பிரான்ஸ்), மயூரன் ஆகியோரின் அன்புத் தந்தையாரும், தயாகரன், வசந்தகுமார் (T.A. திருகோணமலை) ஆகியோரின் அன்பு மாமனாரும், சிவாஜினி, ஷாமினி, தர்சிகா ஆகியோரின் அன்புப் பேரனுமாவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய விவரம் பின்னர் அறிவிக்கப்படும்.

இத்தகவலை உற்றார், உறவினர், நண்பர்கள் ஏற்றுக்கொள்ளவும்.

தகவல்:
தர்மலிங்கம்
[தம்பி]

நீர்வேலி வடக்கு,
நீர்வேலி.

(51490)

## சண்முகம்பிள்ளை தர்மராசா

நல்லூரைச் சேர்ந்த சண்முகம்பிள்ளை தர்மராசா 29-11-97 இல் 32/3 மல்வத்தை வீதி, தெகிவளையில் காலமானார்.

இவர் காலஞ்சென்றவர்களான சண்முகம்பிள்ளை-இராசம்மா தம்பதியரின் அன்பு மகன் ஆவார், அன்னாரின் இறுதிக்கிரியைகள் தெகிவளையில் நடைபெறும்.

தகவல்:
திருமதி நகுலேஸ்வரி சிவசுப்பிரமணியம்
(சகோதரி)
(யா/ நல்லூர் தமிழ்ப்பெண்கள் பாடசாலை)

74/1 சட்டநாதர் வீதி,
நல்லூர்.

(51493)

## திருமதி பொன்னம்மா ஐயாத்துரை

கோண்டாவில் கிழக்கைச் சேர்ந்த திருமதி பொன்னம்மா ஐயாத்துரை 29.11.1997 இல் காலமானார்.

இவர் காலஞ்சென்ற கணபதிப்பிள்ளை நாகம்மாவின் மகளும், காலஞ்சென்ற தாவடி வல்லிபுரம்—பார்வதி தம்பதிகளின் மருமகளும், ஐயாத்துரையின் அன்பு மனைவியும், காலஞ்சென்ற சுப்பிரமணியத்தின் சகோதரியும், துரைசிங்கம், பாலசுப்பிரமணியம், திருமதி பரமேஸ்வரி, கணேசலிங்கம், கமலாதேவி, முத்துலிங்கம், மகாதேவன், மனோன்மணி, விமலாதேவி ஆகியோரின் அன்புத்தாயாரும், மகாலட்சுமி, சந்திரவதனா, காலஞ்சென்ற சுப்பிரமணியம் (பொலீஸ் திணைக்களம்), சரோஜினிதேவி, சிவலிங்கம், பத்மாவதி, லீலாவதி, காசிநாதர், (அஞ்சலகம், கோப்பாய்) பாலச்சந்திரன் (இளைப்பாறிய படைவரைஞர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், திருமதி சரஸ்வதி, முத்தாபரணம் ஆகியோரின் மைத்துனியும் இளங்குமார், சிவகுமார், சதீஸ்குமார், சந்திரகுமார் (ஜேர்மனி), நிர்மலா (கனடா), மாலினி. ரஞ்சித்குமார், ரஞ்சினி, இராசகுமார் (லண்டன்), இராசேந்திரம், ரவீந்திரன், நவநீதன், லிங்கேஸ்வரன் (கனடா), நிர்மலா (கனடா), சாந்தினி, சுகந்தினி, தயாழினி, சிவாஜினி, ஜெயந்தினி, தர்சன் (ஜேர்மனி), கார்த்தீபன், தர்சிகா, துஷாந்தன் (கனடா), சுஜீலன், கேமினி, சுகிர்தினி, தாட்சாயினி, பிரதாயினி, சுஜீபா, நிஷாந்தன், செந்தூரன், கார்த்திக்குமரன், திருபரன், கலைமதி, கிருபரன், குருபரன், விகிர்தா, கரிகரன், தீனதயாபரன் ஆகியோரின் பேர்த்தியும், நிருஷன், சஞ்சீவ் ஆகியோரின் பூட்டியும் ஆவார்.

இவரின் ஈமக்கிரியைகள் 30.11.1997 ஞாயிற்றுக்கிழமை மு.ப. 10 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் கோண்டாவில் இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவருக்கும் அறியத்தருகிறோம்.

தகவல்:
ஐ. துரைசிங்கம்
(மகன்)

கோண்டாவில் கிழக்கு,
கோண்டாவில்.

[51484]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# புதிய அரசமைக்க பி.ஜே.பி. முயலும்

## அத்வானி, வாஜ்பேக்கு முடிவு எடுக்க அதிகாரம்

புதுடில்லி, நவ. 30

பிரதமர் குஜ்ரால் தலைமையிலான ஐக்கிய முன்னணி அரசு பதவி விலகியதை அடுத்து எழுந்துள்ள அரசியல் நிலைமையைப் பரிசீலித்து தகுந்த உத்தியை வகுக்கும் பொறுப்பை பாரதிய ஜனதாக் கட்சியின் மத்திய நிர்வாக்குழு அதன் தலைவர் எல். கே. அத்வானிக்கும் நாடாளுமன்ற எதிர்க்கட்சித்தலைவர் அடல் பிஹாரி வாஜ்பேயுக்கும் வழங்கியுள்ளது.

நேற்றுக்காலை பாரதிய ஜனதாக் கட்சியின் மத்திய நிர்வாகக் குழு புதுடில்லியில் கூடி இந்த முடிவை எடுத்தது.

தோழமைக் கட்சிகளுடன் பேச்சு நடத்தி மத்தியில் அரசு அமைக்கும் வகையில் இறுதி முடிவு எடுக்கும் அதிகாரமும் இவர்கள் இருவருக்கும் வழங்கப்பட்டிருக்கிறது.

மத்தியில் ஆட்சி அமைக்க தனக்குள்ள அதிகாரம் உட்பட அனைத்து விடயங்கள் குறித்தும் பி. ஜே. பி தனது தோழமைக் கட்சிகளின் தலைவர்களுடன் பேச்சு நடத்தும் என்று கட்சியின் செய்தித் தொடர்பாளர் தெரிவித்தார்.

அகாலிதள், சிவசேனை, சமதானக்கட்சி, ஹரியானா விஹாஸ் கட்சி ஆகியன பி. ஜே. பியின் பிரதான தோழமைக் கட்சிகள் ஆகும்.

நாட்டில் இடைக்காலத்தேர்தல் நடத்தப்படுவதைத் தவிர்த்து பி. ஜே. பிக்கு அரசமைக்கும் வாய்ப்பு அளிக்கப்பட வேண்டும் என்று சிவசேனையின் தலைவர் பால்தக்கரே தெரிவித்துள்ளார்.

தேர்தலை நடத்துவதை விட வேறு வழி இல்லை என்று மேற்குவங்க முதல்வர் ஜோதி பாசு கூறியுள்ளார்.

(ஐ)

### தளபதி கைது செய்யப்பட்டதை அடுத்து

## இராணுவ அணிகள் இடையே கின்ஸாசாவில் மோதல்!

கின்ஸாசா, நவ. 30

கொங்கோ ஜனநாயகக் குடியரசின் (முன்னாள் ஸயர்) தலைநகர் கின்ஸாசாவில் போட்டி இராணுவக் குழுக்களுக்கு இடையே மோதல்கள் இடம்பெற்று வருகின்றன.

கின்ஸாசாவுக்கு அருகே உள்ள இராணுவ முகாம் பகுதியில் நேற்று முன்தினம் இரவு துப்பாக்கிச் சூட்டுச் சத்தங்கள் கேட்டதாகவும், அதனைத் தொடர்ந்து நகரின் பல இடங்களிலும் வேட்டொலிகள் பரவலாகக் கேட்டதாகவும் அந்நகரில் உள்ள பி. பி. ஸி செய்தியாளர் தெரிவித்தார்.

ஜீப்பில் வந்த இராணுவக் குழுவினர் அதிபர் லோறன்ட் கபீலாவின் இல்லத்துக்கு வெளியே அதிபரின் பாதுகாப்புப் படையினர் மீது தாக்குதல் நடத்தியதாகவும் இதனால் அதிபர் கபீலாவுக்கு பாதிப்பு எதுவும் ஏற்படவில்லை என்றும் அறிவிக்கப்பட்டிருக்கிறது.

இதுவரை நடந்த மோதல்களில் 11 பேர்வரை பலியாகியுள்ளனர். நாட்டின் இராணுவத் தளபதி ஜெனரல் நின்டங்கா ஒழுங்கு நடவடிக்கைக்காகக் கைது செய்யப்பட்டதை அடுத்தே இராணுவம் மற்றும் பொலீஸ் அணிகளுக்கு இடையே மோதல்கள் வெடித்துள்ளன.

ஜெனரல் நின்டங்கா அதிரடிப்புரட்சி ஒன்றை நடத்த திட்டமிட்டிருந்தார் என பொய்யான குற்றச்சாட்டுக்கள் அவர்மீது சுமத்தப்பட்டிருப்பதாக அவரது ஆதரவாளர்கள் தெரிவித்துள்ளனர் (ஐ)

## ஆஸியில் காட்டுத் தீ

சிட்னி, நவ. 30

ஆஸ்திரேலியாவின் கிழக்குப் பகுதியில் 20-க்கும் மேற்பட்ட இடங்களில் காட்டுத் தீ பரவியுள்ளது.

வரட்சியால் பாதிக்கப்பட்ட காடுகளில் மின்னல் காரணமாகப் பரவிய தீ கடும் காற்றினால் வேகமாக எரிவதாக அவசர சேவைகள் பிரிவு தெரிவித்துள்ளது.

இக் காட்டுத்தீயினால் நியூ சவுத்வேல்ஸ், விக்றோரியா ஆகிய பகுதிகளில் வெப்ப நிலை அதிகரித்துள்ளது. ஹெலிக்கொப்டர்கள் மூலம் தீயை அணைக்க முயற்சி எடுக்கப்பட்டு வருகிறது.

## ஏழு குழந்தைகளும் சுகமே உள்ளன

நியூயோர்க், நவ. 30

அமெரிக்காவில் ஒரே சூலில் பிறந்த ஏழு குழந்தைகளும் நலமாக இருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொபி, கென்னி மெக்காகோ என்ற தம்பதியினருக்கு கடந்த 19 ஆம் திகதி 4 ஆண் குழந்தைகளும். 3 பெண் குழந்தைகளும் பிறந்தன.

இவற்றில் நான்கு குழந்தைகள் தற்சமயம் வாய் மூலம் உணவு அருந்துகின்றன. மூன்று குழந்தைகளுக்கு பொருத்தப்பட்டிருந்த சுவாசக் கருவிகள் அகற்றப்பட்டு அவை தற்போது சுயமாகவே மூச்சுவிட ஆரம்பித்துள்ளன.

## ஈராக் பின்னடிப்பு

பக்தாத், நவ. 30

தடை செய்யப்பட்ட ஆயுதங்களும் பொருள்களும் வைக்கப்பட்டுள்ளன என்பதைக் கண்டறிய அதிபர் சதாம் ஹுசேய்னின் மாளிகைகளைச் சோதனையிட ஐ. நா. நிபுணர்களுக்கு அனுமதி வழங்குவது என்ற முன்னைய முடிவை ஈராக் மாற்றிக் கொண்டதாக அமெரிக்கா குற்றஞ் சாட்டியுள்ளது. (ஐ)

## 110 நாடுகள் ஒப்பமிடும்

கனடாவின் ஒட்டாவா நகரில் அடுத்த மாதம் கைச்சாத்திடப்படவுள்ள நிலக்கண்ணிகளைத் தடைசெய்யும் சர்வதேச ஒப்பந்தத்தில் ஒப்பமிட ஜப்பான் முன்வந்திருப்பதை அடுத்து அந்த உடன்படிக்கையில் கைச்சாத்திடவுள்ள மொத்த நாடுகளின் எண்ணிக்கை 110 ஐ தாண்டியுள்ளது. (ஐ)

## குஜ்ராலின் பதவி விலகலை ஜனாதிபதி ஏற்றார்

புதுடில்லி, நவ. 30

ஐக்கிய முன்னணி அரசுக்கு வெளியே இருந்து வழங்கி வந்த ஆதரவை காங்கிரஸ் கட்சி விலக்கியதை அடுத்து பிரதமர் ஐ கே. குஜ்ரால் ராஜினாமாச் செய்துள்ளார்.

தமது அமைச்சரவையின் ராஜினாமாவை அவர் நேற்று அதிகாலை வேளை ஜனாதிபதி கே. ஆர். நாராயணனிடம் கையளித்தார்.

பிரதமரின் பதவி விலகலை ஏற்றுக் கொண்ட ஜனாதிபதி நாராயணன் மாற்று ஏற்பாடுகள் செய்யப்படும் வரை பதவியில் நீடிக்குமாறு அவரிடம் கேட்டுக் கொண்டார்.

நாடாளுமன்றத்தைக் கலைக்குமாறு பிரதமர் குஜ்ரால் ஜனாதிபதியிடம் கோரவில்லை.

கொள்கை நோக்கையும், தார்மீக நெறிமுறைகளையும் நிலைநாட்டுவதற்காகவே ஐக்கிய முன்னணி அமைச்சரவை பதவி விலகியதாக அதன் அமைப்பாளர் சந்திரபாபு நாயுடு தெரிவித்தார். (ஐ)

## ஷெரீப்பின் ஆதரவாளர்கள் நீதிமன்றத்தினுள் கலகம்

### வழக்கு விசாரணை கைவிடப்பட்டது

இஸ்லாமாபாத், நவ. 30

பிரதமர் நவாஸ் ஷெரீப் மீதான நீதிமன்ற அவமதிப்புக் குற்றச்சாட்டு தொடர்பான விசாரணை நேற்று முன்தினம் பாகிஸ்தான் உயர் நீதிமன்றத்தில் ஆரம்பமான வேளை பிரதமரின் ஆதரவாளர்கள் நீதிமன்றத்துக்குள் பலவந்தமாக நுழைந்து கலகம் செய்தனர்.

தலைமை நீதிபதிக்கு எதிராக அவர்கள் கோஷம் எழுப்பியதை அடுத்து நீதிமன்ற நடவடிக்கைகள் கைவிடப்பட்டன.

பொலீஸார் வெறுமனே பார்த்துக் கொண்டு நிற்க பெரும் எண்ணிக்கையானோர் உயர் நீதிமன்றத்துக்குள் புகுந்தனர். தலைமை நீதிபதியை 'பெண் நாய்' எனக் கூறி அவர்கள் கோஷமிட்டனர்.

நீதிமன்ற அவமதிப்பு வழக்கில் பிரதமர் நவாஸ் ஷெரீப் குற்றமிழைத்தவராகக் கருதப்பட்டால் அவர் பதவி இழக்கும் நிலை ஏற்படும் என்பதால் இந்த நீதிமன்ற விசாரணை அதிமுக்கியத்துவம் வாய்ந்த ஒன்றாக எதிர்பார்க்கப்பட்டது.

ஆனால் தலைமை நீதிபதி குறித்து உயர் நீதிமன்ற நீதிபதிகள் இடையே கருத்து வேறுபாடுகள் எழுந்துள்ளன. தலைமை நீதிபதி பதவியில் இருந்து இடைநிறுத்தம் செய்யப்பட்டிருப்பதாக சில நீதிபதிகள் தெரிவித்ததை அடுத்து பிரதமர் ஷெரீப்பின் கட்சியினர் உஷாரடைந்துள்ளனர். (ஐ)

## வட ஆப்கானில் புதை குழிகளில் ஆயிரக்கணக்கான சடலங்கள்?

### ஐ.நா.குழு நேரில் சென்று விசாரிக்கும்

காபூல், நவ. 30

ஆப்கானிஸ்தானின் வடபகுதியில் 2 ஆயிரத்துக்கு மேற்பட்ட சடலங்கள் புதைக்கப்பட்ட பாரிய புதைகுழிகளைக் கண்டுபிடித்திருப்பதாக தலிபான் எதிர்ப்பு கூட்டணிப்படையினர் தெரிவித்துள்ளனர்.

இந்த சடலங்கள் அனைத்தும் தலிபான் இயக்கத்தினரால் படுகொலை செய்யப்பட்ட பொதுமக்களுடையவை என்று எதிரணிப்படை தெரிவித்தது.

ஆனால் இந்த மர்ம சடலங்கள் எதிரணிப்படைகளால் பணயம் வைக்கப்பட்டிருந்த தலிபான் போராளிகளினுடையவை என்று தலிபான் தெரிவித்துள்ளது.

இது தொடர்பாக நேரில் சென்று விசாரணை நடத்துவதற்கு தனியான குழு ஒன்றை ஆப்கானிஸ்தானுக்கு அனுப்ப ஐ. நா. ஆயத்தமாகிவருகிறது.

(ஐ)

### நஷ்ட ஈடு கோரும் விண்ணப்பத்துக்கு

## பொலீஸ் அறிக்கை பெறுவதில் பொதுமக்கள் பெரும் சிரமம்

உரும்பிராய், நவ. 30

வன்செயல் காரணமாகப் பாதிக்கப்பட்ட வீடுகளுக்கும் உடைமைகளுக்கும் நஷ்ட ஈடு வழங்குவதற்கான விண்ணப்பப் படிவங்கள் கிராம சேவை உத்தியோகத்தர்களினால் விநியோகிக்கப்படுகின்றன. ஆனால் பொலீஸ் முறைப்பாட்டுப் பிரதிகளைப் பெறுவதற்குப் பெரும் காலதாமதம் ஏற்படுவதனால் பொதுமக்கள் உரிய காலத்தில் இப்படிவங்களைப் பூர்த்தி செய்து திரும்பக் கையளிக்க முடியாது உள்ளனர்.


பொலீஸில் முறைப்பாடு செய்த திகதி இப்படிவத்தின் 5 ஆவது கட்டத்தில் கோரப்பட்டுள்ளதுடன் முறைப்பாட்டுப்பிரதியும் இணைக்கப்பட வேண்டியுள்ளது. கடந்த கால சம்பவங்களின் பின்பு மீளக் குடியமர்ந்த பல குடும்பத்தவர்கள் பலர் அப்போதைய காலகட்டத்தில் சேதங்கள் பற்றிப் பொலீஸில் முறைப்பாடு செய்யவில்லை. இப்போது அதன் தேவை அத்தியாவசியம் என்பதை உணர்ந்ததும் பொலீஸ் நிலையங்களுக்கு முறைப்பாடு கொடுத்துப் பிரதிகளைப் பெற விண்ணப்பித்தனர் ஆனால் பொலீஸ் அதிகாரிகள் சுமார் ஒருமாத காலத்தின் பின்பு திகதி நிர்ணயித்து அத்திகதியில் வந்து பிரதிகளைப் பெற்றுக்கொள்ளும்படி அறிவுறுத்தியுள்ளனர்.

இதன் காரணமாகப் பாதிக்கப்பட்ட மக்கள், முறைப்பாட்டுப் பிரதிகள் கிடைக்கும்வரை காத்திருக்க வேண்டிய நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளனர்.

இதே வேளை, முறைப்பாட்டுப் பிரதிகளைச் சமர்ப்பிப்பவர்களுக்கு மட்டுமே விண்ணப்பப் படிவங்களைக் கிராம சேவை உத்தியோகத்தர்கள் வழங்குகின்றனர்.

(ஐ-154)

## எங்கள் தெய்வங்கள்

| 33 ஆம் ஆண்டு நினைவு | 10 ஆம் ஆண்டு நினைவு |
| --- | --- |
|  |  |
| அமரர்<br>க. பொன்னையா<br>மறைவு: 16-11-64 | திருமதி<br>பொ. நாகரத்தினம்<br>மறைவு: 30-11-87 |

எங்கள் அன்புத் தெய்வங்களே! நீங்கள்
இவ்வுலகை விட்டுப் பிரிந்தாலும் எமது உள்ளங்களில்
என்றுமே வாழ்ந்து கொண்டு இருக்கின்றீர்கள்.

பிரிவால் வாடும்:
மக்கள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

விநாயகர் வீதி,
நல்லூர் வடக்கு, யாழ்ப்பாணம்.

[51485]

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# மேலும் 183 விவசாயிகள் ஓய்வூதியம் பெறத் தெரிவு

திருநெல்வேலி, நவ. 30

யாழ். மாவட்டத்தில் விவசாய ஓய்வூதியத் திட்டத்தின் கீழ் கடந்த ஒக்ரோபர் மாதத்தில் 183 பேர் ஓய்வூதியம் பெறுவதற்குத் தகுதி பெற்றுள்ளார்கள். இவர்களின் ஓய்வூதிய விவரங்கள் யாவும் கொழும்பிலுள்ள தலைமை அலுவலகத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுளளன.

அங்கிருந்து அங்கீகாரம் கிடைத்தவுடன் அடுத்த மாதத்தில் இவர்கள் தங்களது ஓய்வூதியக் கொடுப்பனவை பெற்றுக் கொள்ள முடியும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை யாழ். மாவட்டத்தில் விவசாய ஓய்வூதியத் திட்டத்தில் இதுவரை 4 ஆயிரத்து 815 பேர் இணைந்துள்ளார்கள் என்றும் தெரிவிக்கப்பட்டது. (ஐ-135)


## விற்பனைக்கு

BIRLA YAMAHA PORTABLE GENE RATOR
1500VA out put உடைய புத்தம்
புதிய ஜெனரேற்றர் எம்மிடம் விற்பனைக்குண்டு

தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:
த. குமாரசாமி ரெக்ஸ்ரைல்ஸ்,
352, நாவலர்வீதி,
யாழ்ப்பாணம்.

(51432)


## மாணவருக்குப் போட்டிகள்

குருநகர், நவ. 30

குரும்பசிட்டி வளர்மதி சனசமூக நிலையம் தனது 30 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு வலி. வடக்கு பிரதேச செயலர் பிரிவை வதிவிடமாகக் கொண்ட ஆண்டு 5 முதல் ஆண்டு 13 வரை கல்வி பயிலும் பாடசாலை மாணவர்கள் கலந்து கொள்ளும் கட்டுரை, கவிதை, சிறுகதை, பேச்சு, சுவரொட்டி, சித்திரப் போட்டிகளை நடத்த உள்ளது.

இப்போட்டிகள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 9 மணி முதல் வயாவிளான் மத்திய மகா வித்தியாலயத்தில் நடைபெறும். (ஐ-51)

## கல்கிசை கடையில் திருட்டு

கல்கிசையில் காலி வீதியில் அமைந்துள்ள தமிழர் ஒருவருக்குச் சொந்தமான 'லிங் காஸ்ஸ்ரோர்ஸ்' என்னும்வர்த்தக நிலையத்தில் கடந்த செவ்வாய்க்கிழமை இரவு திருட்டுச் சம்பவம் இடம் பெற்றுள்ளது.

கடையின் பின்புறவழியால் கைத்துப்பாக்கி, கிறிஸ்கத்தி சகிதம் நுழைந்த மூன்று நபர்கள் அங்கிருந்தோரைப் பயமுறுத்தி 22 ஆயிரம் ரூபா பணத்தையும், 4 பவுண் பெறுமதியான நகைகள் மற்றும் பல பொருள்களையும் திருடிச் சென்றுள்ளனர்.

இது பற்றி கல்கிசைப் பொலீசாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-ரீ)

## ஆலயத்துக்கு மணிக்கோபுரம்

கொழும்புத்துறை, நவ. 30

கோண்டாவில் நெட்டிலைப்பாய் அருள்மிகு ஸ்ரீ பிள்ளையார் கோயிலில் புதிய மணிக்கோபுரம் அமைக்கும் பணி ஆரம்பமாகி நடைபெற்று வருகிறது.

ஆலயப்பரிபாலன சபையினரின் துரித முயற்சியில் வேலைகள் ஆரம்பமாகி நடை பெற்று வருகின்றன. (ஐ-30)

## மாணவரின் கருத்தரங்கு

யாழ். மத்திய கல்லூரியில் லியோ கழகம் நடத்தும் ஜி. சீ. ஈ. சாதாரண தர மாணவர்களுக்கான வழிகாட்டல் கருத்தரங்கு நாளை முதலாம் திகதி முதல் 3 ஆம் திகதிவரை கல்லூரியின் தம்பர் மண்டபத்தில் காலை 9 மணி முதல் 2. 30 மணிவரை நடைபெறும். (ஐ-ரீ)


## முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



| தோற்றம்: | மறைவு: |
|---|---|
| 23 | 11 |
| — | — |
| 03 | 12 |
| — | — |
| 1946 | 1996 |

### அமரர் இராசலிங்கம் நவரத்தினம்

(சனாதனரிஷ விகவ கோத்திரத் தலைவர்)

திதி: 1997 — 11 — 30 (ஞாயிறு)

இல்லத்தில் ஒளியேற்றி இதயத்தால் அன்பு செய்து அரவணைத்த தெய்வம் நீங்கள். எங்கள் உள்ளத்தை துயரில் ஆழ்த்தி துறந்தேன் சென்றீர்கள் அப்பா!

உங்கள் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

இன்று 30 - 11 - 1997 இல் நடைபெறும் கிரியைகளிலும், மதியபோசனத்திலும் கலந்து கொள்ளுமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

உம் பிரிவால் துயருறும்:
மனைவி, பிள்ளைகள்,
சகோதரர்கள், மைத்துனர், மைத்துனி,
மருமகள்.

இ. கணேசு,
89, குமாரவீதி,
நல்லூர், யாழ்ப்பாணம். (51463)



**WANTED MONTESSORI TEACHER**

(Trained) For
Trinity Tiny Tots
Manipay.

Apply:
Pastor, Assembly
Of God Manipay
[51481]





## நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுநர் சபை–1998

மேற்படி கோயிலுக்கு 1998 ஆம் ஆண்டுக்கான வழிபடுநர்சபை உறுப்பினர்களாகச் சேர விரும்பும், அல்லது புதுப்பிக்க விரும்பும் கீழ்க்காணும் தகைமையுள்ள சகல வழிபடுநர்களும் தமக்குரிய வருடாந்த அங்கத்துவப் பணத்தை ''பொருளாளர் ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில் நயினாதீவு'' என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக் கட்டளையாகவோ அல்லது தபாற் கட்டளையாகவோ பெற்று விண்ணப்பத்துடன் சேர்த்து 1997 ஆம் ஆண்டு மார்கழி மாதம் முப்பத்தோராம் திகதி (31—12—1997) மாலை 5.00 மணிக்கு முன் கிடைக்கக் கூடியதாகச் 'செயலாளர், ஸ்ரீநாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு' என்ற முகவரியிட்டு கடிதமூலம் அனுப்புமாறு அல்லது கோயில் அறங்காவலர்சபைக் காரியாலயத்தில் இதற்கென வைக்கப்பட்டுள்ள பெட்டியில் போடுமாறும் கேட்டுக் கொள்ளப்படுகின்றீர்கள். விண்ணப்பங்கள் அடங்கிய கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் வழிபடுநர்சபை உறுப்புரிமை விண்ணப்பம் எனக் குறிப்பிடப்படல் வேண்டும்.

வழிபடுநர் சபை உறுப்புரிமைக்கான தகைமைகள்:-

1. (அ) விண்ணப்பம் அனுப்ப வேண்டிய கடைசித் திகதியில் 21 வயதுக்கு மேற்பட்டவராகவும்
   (ஆ) இந்து மதத்தைச் சேர்ந்தவராகவும்
   (இ) நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் வழிபடுநராகவும்.
   (ஈ) இலங்கைக் குடியரசில் நிரந்தரமாக வசிப்பவராக இருக்கும் ஒருவரே அங்கத்தவராக இருக்கத் தகுதி உடையவர். ஆனால் அப்படிப்பட்ட ஒருவர்

2; (அ) தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் தினம் நடைபெறும் நான்கு கால நித்திய பூசை ஒன்றின் உபயகாரராக இருப்பாராயின் அல்லது
   (ஆ) தான் விண்ணப்பிக்கும் வருடத்தில் வருடாந்த மகோற்சவ திருவிழாக்கள் உட்பட்ட எந்த ஒரு விசேட நைமித்திய உற்சவ பூசை ஒன்றின் உபயகாரராக இருப்பாராயின் அப்படிப்பட்ட ஒருவரும் மேற்கூறிய நித்திய விசேட நைமித்திய பூசைகள், திருவிழாக்கள், மகோற்சவம் ஒன்றை, ஒன்று அல்லது அதற்கு மேற்பட்ட குடும்பத்தினராலோ அல்லது வழிபடுநரின் பிரிவினராலோ வகுப்பினராவோ செய்யப்படின் உறுப்புரிமை 2 (அ) அல்லது (ஆ) கூற்றின்படி அக்குடும்பமோ அல்லது அவ்வகுப்பினரோ தத்தமக்குள் வயது வந்த ஒருவரைத் தேர்ந்தெடுத்து அவரை வழிபடுநரின் சபைக்கு அங்கத்தவராக விண்ணப்பிக்கும் ஒருவர் வருடாந்த அங்கத்துவப் பணமாக ரூபா பத்து (10/-) செலுத்தலாம். அத்தகைமையற்றவர்கள் மேற்கூறிய உறுப்புரிமை (அ) அல்லது (ஆ) வின்படி
   (இ) தனது விண்ணப்பப்படிவத்துடன் வருடாந்த அங்கத்துவப் பணமாக ரூபா ஐம்பது (50/-) பொருளாளர் ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில், நயினாதீவு என்ற பெயருக்கு எழுதப்பட்ட காசுக்கட்டளையாகவோ, அல்லது தபாற்கட்டளையாகவோ பெற்று அனுப்பப்படுதல் வேண்டும்.

அத்துடன் எப்பொழுதாவது ஒழுக்கக் கேடு சம்பந்தமான குற்றத்திற்காக எந்த ஒரு நீதிமன்றத்திலும் தண்டிக்கப்படாதவராகவும், இக்கோயிலின் ஊழியராக அல்லது மதகுருவாக இருந்து வேதனங்கள் அல்லது கொடுப்பனவுகள் பெறாத ஒருவராகவும் இக்கோயிலின் இலாபகரமான எவ்விதவேலைகளுக்குமான ஒப்பந்தம் ஒன்றைச் செய்து கொள்ளாதவராகவும் இருத்தல் வேண்டும்.

குறிப்பு:- விண்ணப்பதாரியின் கையொப்பம் ஒரு சமாதான நீதிவான், இந்துமதகுரு, இலங்கை நிர்வாகசேவை உத்தியோகத்தர், கிராமசேவை உத்தியோகத்தர், அல்லது அரசாங்கப் பாடசாலை அதிபர் மூலம் அத்தாட்சிப் படுத்தப்படல் வேண்டும். அத்தாட்சிப்படுத்துபவரின் பெயர், பதவிக்கான றபர் முத்திரை இடப்படாத விண்ணப்பங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது. ரூபா 5/- செலுத்தி உரிய விண்ணப்பப் படிவத்தை கோயில் பணிமனையில் பெற்றுக் கொள்ளலாம்.

வணக்கம்.

அன்னையின் சேவையில்
ந. விஸ்வநாதன்
செயலாளர்

அறங்காவலர் சபை,
ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில்,
நயினாதீவு. (51441)



## நியூ விமாகி



நத்தார் புதுவருடத்தையிட்டு
விசேட மலிவு விலையில்
அன்பளிப்புப் பொருள்கள், வீட்டுப் பாவனைப் பொருள்கள்

| | |
|---|---|
| ★ செரமிக் பிளேற்ஸ் | ★ கிளாஸ் பிளேற்ஸ் |
| ★ செரமிக் கறிடிஸ் | ★ கிளாஸ் கறிடிஸ் |
| ★ கப் & சோசர் செரமிக் | ★ கப் & சோசர் கிளாஸ் |
| ★ றைஸ் பிளேற்ஸ் | ★ ரீ பொட் |
| ★ செருமிக் ரீ மக் | ★ கிளாஸ் ரீ மக் |
| ★ டினர் செற் | ★ ரீ செற் |
| ★ கிளாஸ் வகைகள் | ★ யக் வகைகள் |

முதலிய பொருள்கள்

அத்துடன்

| | |
|---|---|
| ★ இனாமல் பெயின்ற் வகைகள் | ★ எமல்சன் பெயின்ற் வகைகள் |
| ★ காட்போட் சிற் 8' x 4'' | ★ போமிக்கா சிற் 8' x 4'' |
| ★ நிலவிரிப்புக்கள் (பலவர்ணங்களில்) | |
| ★ L. சிங் (மாபிள்) | ★ K. சிங் (மாபிள்) |
| ★ S. Steel சிங் | ★ ஸ்கொட்டிங்பான் |
| ★ Wash Basin | ★ கொமேட் சிஸ்ரன் tang |
| ★ S. பைப் 4'' | ★ S பைப் 1½'' |
| ★ மாபிள் வகைகள் 4'' x 4'' | ★ மாபிள் வகைகள் 6 x 6 |

ஆகிய பொருள்களையும் பெற்றுக் கொள்ள நாட வேண்டிய ஸ்தாபனம்:

**நியூ விமாகி**
27/3, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம். (51462)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திரத்துக்காக அமெரிக்காவே நீண்ட யுத்தத்தை நடத்தியது

## முள்ளியவளைக் கூட்டத்தில் பேச்சு

வவுனியா, நவ. 30

1777 ஆம் ஆண்டுக்கு முன்னர் சுதந்திரத்துக்காக அமெரிக்கா கூட நீண்ட கொடிய போரை நடத்தி பெரும் இழப்புக்களைச் சந்தித்தது. அங்கு போராட்டம் நடத்திய அனைவருமே கொள்ளைக்காரர்கள் என்றும் திருடர்கள் என்றும் இங்கிலாந்தினால் குற்றம் சாட்டப்பட்டனர். ''பயங்கரவாதிகள்'' என்ற சொல் அன்று தெரியாது. அவர்கள் அன்று போராடி வென்றனர். இன்று எங்களைப் பயங்கரவாதிகள் எனப் பட்டம் சூட்டுகிறார்கள். அதனைப் பற்றி எமக்குக் கவலை இல்லை.

தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்தின் பிரமுகர் வே. பாலகுமாரன் இவ்வாறு தெரிவித்தார்.

மாவீரர் தினத்தை ஒட்டி முள்ளியவளையில் நடந்த வைபவம் ஒன்றில் உரையாற்றிய போதே அவர் இவ்வாறு கூறினார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஒவ்வொரு வருடமும் மாவீரரின் ஈகை வட்டம் பெருகிக் கொண்டு போகிறது. எமது போராட்டம் மிக முக்கிய கட்டத்தை இன்று அடைந்திருக்கிறது. இந்தப் போரிலே நாங்கள் வெல்ல வேண்டும். எங்களுக்குத் தெரியும் தமிழன் நீண்ட காலமாக எந்த ஒரு போரிலும் வெல்லவில்லை. போர் என்பது சமரல்ல. இம்முறை தமிழன் இந்தப் போரிலே வெல்ல வேண்டும். இனிமேல் போரில்லாமல் போவதற்காகவே நாம் போர் நடத்துகிறோம். இது ஓர் இறுதிப் போராக அமைய வேண்டும். இந்தப் போர் நீண்டு செல்லும். அதற்கு காலம் குறிக்க என்னால் முடியாது. வென்றவனுக்குத் தான் வாழ்க்கை. வெல்லாவிட்டால் நாங்கள் பயங்கரவாதிகள் தான்.

பருந்திடமிருந்து தனது குஞ்சைக் காப்பாற்றுகின்ற கோழி ஒரு பயங்கரவாதி என்றால் நாங்களும் பயங்கரவாதிகள்தான்.

ஓநாயிடமிருந்து தனது குட்டியைக் காப்பாற்றும் ஒரு மான் அல்லது ஓர் ஆடு பயங்கரவாதி என்றால் நாங்களும் பயங்கரவாதிகளாக இருந்துவிட்டுப் போகிறோம், பரவாயில்லை.

இங்கே விதை குழியில் துயில் கொள்ளும் அத்தனை போராளிகளும் பயங்கரவாதிகளாக இருக்கட்டும்; பரவாயில்லை. எங்களுக்கு அந்தப் பட்டம் இருக்கட்டும் நாங்கள் கவலைப்படவில்லை. ஆனால் இந்த ஒரு போரில் தமிழன் வெல்ல வேண்டும். அதை வெல்வதற்காகத்தான் வரலாறு இத்தனை ஆண்டு காலமாக இத்தனை அவலங்களுக்கு ஊடாக எம்மைவாழ வைத்திருக்கிறது.

எமது வாழ்க்கையை நாங்கள் திட்டமிட்டு, வறுமையிலும் செம்மையாக வாழப் பழக வேண்டும். ஒரு நேர் கோட்டு வடிவிலே எமது சமூகம் ஒரு விழுப்பமான பாதையிலே போக வேண்டியதேவை எங்களுக்கு இருக்கிறது. ஏனென்றால் உலகம் எங்களை உற்று நோக்கியபடி இருக்கிறது. ஒரு நாள் வரும் அப்போது உலகம் வந்து எங்களிடம் கேட்கும் உங்களுக்கு என்ன வேண்டும் என்று. அவ்வாறு அவர்கள்வந்து கேட்கும் போது நாங்கள் அவர்களிலே தங்கியிருக்கக் கூடாது.

தமிழர்கள்உலகத்தால் உற்றுப்பார்க்கப்படும் ஓர் இனம். விடுதலைக்காக நாம் எந்த விலையையும் கொடுக்கத் தயார் என்பதை நிருபித்திருக்கிறோம்.

மிக இறுக்கமான, இரகசியமான, அதி உச்ச பயன்பாட்டைக் கொடுக்கக் கூடிய போர் உத்தி வல்லமை வாய்ந்தவர்கள் புலிகள். தமிழரின் மறைக்கப்பட்ட தூய்மையான வரலாறு திரும்ப மறைந்து போகக் கூடாது. ஏற்கனவே தமிழர்களின் 2500 ஆண்டுகால வரலாறு புதைக்கப்பட்டுள்ளது என்றார். (ஐ-164)


யா/இராமநாதன் கல்லூரி

நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் - 1997

காலம்: 30-11-97 ஞாயிற்றுக்கிழமை
முற்பகல் 9-00 மணி

இடம்: கல்லூரி மண்டபம்

தலைவர்: திருமதி ஆ. சிவஞானசுந்தரம் (அதிபர்)

பிரதம விருந்தினர்:
திரு. து. வைத்திலிங்கம் அவர்கள்
(மேலதிக அரசாங்க அதிபர், யாழ். செயலகம்)

நிறுவுநர் நினைவுப் பேருரை:
பேராசிரியர் வி. சிவசாமி அவர்கள்
(தலைவர், சமஸ்கிருதத்துறை, யாழ். பல்கலைக்கழகம்)

கௌரவ விருந்தினர்:
சிவத்தமிழ்ச் செல்வி தங்கம்மா அப்பாக்குட்டி அவர்கள்

சிறப்பு விருந்தினர்கள்:
திரு. ஆ. தற்பரானந்தன் அவர்கள்
(பிரதிக் கல்விப் பணிப்பாளர், உடுவில்)
திருமதி ச. கல்யாணசுந்தரேசன் அவர்கள்
(ஓய்வுபெற்ற உப அதிபர், இராமநாதன் கல்லூரி)

பரிசில் வழங்குதல்;
திருமதி ஜெ. வைத்திலிங்கம் அவர்கள்

கலை நிகழ்ச்சிகளும் இடம்பெறும்.
தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

அதிபர், ஆசிரியர்கள், மாணவர்கள்
பழைய மாணவர்கள்
பாடசாலை அபிவிருத்திச்சங்கம்.
இராமநாதன் கல்லூரி. (சி-2213)


## 24 குடும்பங்களுக்கு 5 ஆயிரம் ரூபா

கொழும்புத்துறை, நவ. 30

யாழ். கொட்டடி (ஜே- 83 கிராம சேவையாளர் பிரிவில் மீளக் குடியமர்ந்தவர்களுக்கான ரூபா 5 ஆயிரம் கொடுப்பனவு 24 குடும்பங்களுக்கு 3 ஆவது கட்டமாக வழங்கப் படவுள்ளது.

கொட்டடி வீதியில் உள்ள கிராம சேவையாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டிருக்கும் பெயர்ப்பட்டியலில் உள்ளவர்கள் தத்தமது பங்கீட்டு அட்டை, வங்கிப்புத்தகம், தேசிய அடையாள அட்டை, ஐந்து ரூபா முத்திரை, குடும்ப அட்டை என்பவற்றுடன் நேரில் தம்மைச்சந்திக்குமாறு இப்பகுதிக் கிராமசேவையாளர் ந. லிங்கேஸ்வரன் தெரிவித்துள்ளார். (ஐ-30)

# மந்திகை நீர் விநியோகத்தை சீராக்க 'போரூட்' உதவும்

வடமராட்சி, நவ. 30

மந்திகை அரசினர் ஆதார வைத்தியசாலை நீர் விநியோகத்திட்டத்துக்கென 'போரூட்' நிறுவனம் இரு குழாய்க்கிணறுகளை அமைத்துக் கொடுக்க முன் வந்துள்ளது.

இங்கு நீர் விநியோகத் திட்டத்துக்கென உள்ள தண்ணீர்த் தாங்கிக்கு மிக நீண்ட தூரத்திலுள்ள கிணறு ஒன்றிலிருந்து நீரிறைக்கும் இயந்திரங்கள் மூலமே நீர் வந்து சேருகிறது.

போதிய நீர் இறைக்கும் இயந்திரங்கள் இன்மையாலும், மோட்டர்கள் பழுதடைந்துள்ளதாலும் தண்ணீர்த்தாங்கிக்குத் தேவையான நீரைப் பெறமுடியாதிருக்கிறது. இதனால் வைத்தியசாலைக்குத் தேவையான நீரை சில சமயங்களில் பெற முடியாத நிலை ஏற்படுகிறது.

இதனைக் கருத்திற் கொண்டு தண்ணீர்த் தாங்கிக்கு அருகிலேயே இரு குழாய்க்கிணறுகளை அமைத்துக் கொடுக்கவும் அவற்றிலிருந்து நீரைப்பெறுவதற்கான நீரிறைக்கும் இயந்திரங்களை வழங்கவும் போரூட் நிறுவனம் முன் வந்துள்ளது.

போரூட் நிறுவனத்தின் இவ்வுதவித்திட்டம் நிறைவேறியதும் வைத்தியசாலையில் நீர்ப்பற்றாக்குறை ஏற்படாது எனத் தெரிவிக்கப்படுகிறது. (ஐ-173)

## யாழ். கூட்டுறவுச் சங்கங்கள்

# கப்பல் கட்டணம் இன்றி பொருள்களை எடுத்துவர வசதி

யாழ். மாவட்ட கூட்டுறவுச் சங்கங்கள் கொழும்பில் இருந்து கப்பல் கட்டணம் இன்றி பொருள்களை எடுத்து வருவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அத்தியாவசிய சேவைகள் நாயகம் சோமபால குணதீர யாழ். மாவட்ட நுகர்ச்சிக் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசத்தின் தலைவர் சீ.வீ.கே. சிவஞானத்துக்கு ''பக்ஸ்'' மூலம் இத்தகவலை அறிவித்துள்ளார்.

கொழும்பில் இருந்து கப்பல் மூலம் பொருள்களை எடுத்துச் செல்லும் போது கட்டணம் அறவிடப்படுவதால் தனியாருடன் போட்டியாக அப்பொருள்களை விற்க முடியாத நிலை ஏற்பட்டுள்ளதாகச் சீ. வீ. கே. சிவஞானம் அத்தியாவசிய சேவைகள் நாயகத்துக்கு ஏற்கனவே தெரிவித்திருந்தார்.

யாழ். மாவட்டத்தில் உள்ள கூட்டுறவுச் சங்கங்களுக்குத் தேவையான பொருள்களை ஏற்றிச் செல்ல தனியான கப்பல் ஒன்றைக் கட்டணம் இன்றி ஏற்பாடு செய்து தருவதாக அத்தியாவசிய சேவைகள் நாயகம் அனுப்பிய ''பக்ஸ்'' செய்தியில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ஐ-3)

# தனிச் சிங்களத்தில் வரும் கடிதங்கள், சுற்றறிக்கைகள்

கொழும்புத்துறை, நவ. 30

கொழும்பு மது வரிஆணையாளர் நாயக திணைக்களத்தில் இருந்து யாழ். மதுவரி உதவி ஆணையாளர் திணைக்களத்திற்கு அனுப்பி வைக்கப்படும் கடிதங்கள், சுற்றறிக்கைகள் தனிச்சிங்களத்தில் இருப்பதாகத் தெரியவருகிறது.

அரசகரும மொழிச்சட்டத்துக்கு அமைய சிங்களமொழியில் அனுப்பப்படும் கடிதங்களுக்கான தமிழ்மொழி பெயர்ப்பு அவற்றுடன் இணைக்கப்படுவதில்லை.

கொழும்புத்தலைமை அலுவலகத்தில் பணியாற்றிய ஒரேயொரு தமிழ் அதிகாரியும் வேறு திணைக்களத்திற்கு இடமாற்றம் கிடைத்துச் சென்றுள்ளார். கடந்த மூன்று வருடங்களுக்கு மேலாக கொழும்பில் உள்ள இத்திணைக்களத்தில் தமிழ் உத்தியோகத்தர்கள் எவரும் நியமிக்கப்படவில்லை. (ஐ-30)

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம் நடத்திய பயிற்சிகளில் பங்கு பற்றியவர்களுக்கான சான்றிதழ் வழங்கும் வைபவம் நாளை திங்கட்கிழமை முற்பகல் நிறுவனத்தின் உப அதிபர் அ.நல்லதம்பி தலைமையில் நடைபெறவுள்ளது.

இவ் வைபவத்தில் பிரதம அதிதியாக யாழ். மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் து. வைத்திலிங்கம் கலந்து கொள்வார். (ஐ-135)


வாழ்த்துகின்றோம்

வடக்கு - கிழக்கு மாகாணசபையின் கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்கள பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும் வைத்திய கலாநிதி

மு. தங்கராசா

அவர்களை வாழ்த்துகின்றோம்.

வாழ்த்துவோர்: கால்நடை வைத்தியர்களும், அலுவலர்களும்,
கால்நடை வைத்தியசாலை, பருத்தித்துறை.
(51487)



அகில இலங்கை சபரிமலை ஸ்ரீசாஸ்தாபீடம்
நடத்தும்
15ஆவது ஆண்டு மண்டல பூஜை
மகரஜோதிப் பெரு விழா

இடம்: ஸ்ரீ சித்தி விநாயகர் தேவஸ்தானம் கொழும்பு - 13
(கொச்சிக்கடை தம்பையா முதலியார் சத்திரம் - 30, செண் அன்ரனீஸ் மாவத்தை

காலம்: கார்த்திகை மாதம் 1-ம் திகதி 16-11-97 ஞாயிறு முதல்
மார்கழி மாதம் 18-ம் திகதி 2-1-98 வெள்ளி வரை
48 நாள்களும் மாலை 6-00 மணி முதல் 8-30 மணி வரை நடைபெறும்.

''ஸ்ரீ சாஸ்தா பீடாதிபதி'' சபரிமலைக் குருஸ்வாமி
டாக்டர் ஸ்ரீஐயப்பதாஸன் சாம்பசிவ சிவாச்சாரியார் J. P.
தலைமையில் கிரியைகள் நடைபெறும்.

ரதபவனி 03 - 01 - 1998
தீர்த்தத் திருவிழா 04 - 01 - 1998

அனைவரும் வருக!
ஐயப்பன் அருள் பெறுக!!

அகில இலங்கை சபரிமலை ஸ்ரீசாஸ்தா பீடம்
கொழும்பு.
(51459)

V. [illegible] சாமி
N. S. மோகன் நாயுடு J. P.
(நிர்வாகப் பணிப்பாளர்கள்)



யாழ். செயலக புனர் வாழ்வுப்பகுதி பொருள்களை ஏற்றிச் (காவிச்) செல்வதற்கான

கேள்வி கோரல் - 1997

மேற்படி பெறப்பட்ட கேள்விகள் 1997. 12. 01 (திங்கட்கிழமை) மு. ப. 10. 00 மணிக்கு எனது முன்னிலையில் திறக்கப்படும். ஒப்பந்தகாரர் / அனுமதிக்கப்பட்ட பிரதிநிதிகள் சமுகம் அளிக்கவும்.

க. சண்முகநாதன்,
அரசாங்க அதிபர்,
யாழ்ப்பாண மாவட்டம்.
(சி/2215)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சின்னஞ் சிறுவிளம்பரம்

### விற்பனைக்கு

இரண்டு அலுமாரி (புடைவைக் கடைக்கு உகந்தது) கவுண்டர் என்பன விற்பனைக்குண்டு. நேரில் வந்து பார்வையிட்டு வாங்கலாம். தொடர்பு: மேர்வின் அருகில் 91, மின்சாரவீதி, யாழ்ப்பாணம்.

(51464)

நல்ல நிலையிலுள்ள பஜாஜ் செற்றாக் இன 87 சிறீ தொடர். இலக்கமுடைய ஸ்கூட்டர் விற்பனைக்குண்டு. 186/22 குருநாதர் வீதி, பருத்தித்துறை வீதி, யாழ்ப்பாணம்.

(51480)

இளம் சோடி வான் கோழிகள், மணித்தாரா, கினிக்கோழி, சில்கி, பாப்படெக்ஸ், பன்டம் என்பன விற்பனைக்குண்டு. தொடர்பு: லிங்கமூர்த்தி மயூரன், நவாலி, அரசடி, மானிப்பாய்.

(51479)

### இறைச்சிக் கோழி

புறோயிலர் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்குண்டு. தொடர்பு: R. S. K. கோழிப்பண்ணை, மான்ஸ் பாடசாலை வீதி, உடுவில், சுன்னாகம்.

[51283]

இறைச்சிக் கோழி புறோயிலர் (Broiler) விற்பனைக்குண்டு. தொடர்பு: 141, கோயில்வீதி. யாழ்ப்பாணம்.

(51473)

புறோயிலர் மொத்தமாகவும், சில்லறையாகவும் விற்பனைக்கு உண்டு. தொடர்பு: கிறிஸ்துவுக்காக இளைஞர், 462, பிரதான வீதி, சுண்டுக்குளி, யாழ்ப்பாணம்.

[51451]

### புறோயிலர்

இறைச்சிக்கோழி (Broiler) விற்பனைக்குண்டு. இல. 101, பலாலிறோட், (இலுப்பையடிச் சந்தி அருகில்), யாழ்ப்பாணம். (வாடிக்கையாளர்களுக்கு விசேட சலுகை உண்டு).

(51478)

இறைச்சிக் கோழி (Broiler) விற்பனைக்கு உண்டு. இலவசமாக சுத்தம் செய்து கொடுக்கப்படும். 17(5) கோயில்வீதி, நல்லூர். (ஆஸ்பத்திரி வீதிக்கும் பிரதான வீதிக்கும் இடையில்)

(51476)

### உடன் விற்பனை

கோண்டாவில் கிழக்கு இராமகிருஷ்ணா வீதியில் இராமகிருஷ்ணா பாடசாலைக்கு அருகில் 4½ பரப்புக் காணியுடன் 6 அறைகள் கொண்ட பெரியவீடு மற்றும் வீட்டுத்தளபாடங்கள், ரீ.வீ, டெக் ஜெனரேட்டர் உட்பட உடன்விற்பனைக்குண்டு. தொடர்பு: சுரேஸ் கடை. கோண்டாவில் சந்தி, கோண்டாவில்கிழக்கு (பொ. மனோரஞ்சிதம், சந்திரன் கோண்டாவில் கிழக்கு).

[51452]

### தவறிவிட்டது

சிவமணி மாரிமுத்து ஆகிய எனது விசேட அடையாள அட்டை பருத்தித்துறை வீதி, சங்கிலியன் வீதியில், தவறிவிட்டது கண்டெடுத்தவர்கள் 138/7, நல்லூர் கோயில், வடக்கு வீதி, என்ற விலாசத்தில் ஒப்படைத்து உதவவும்.

(51477)

### மணமகள் தேவை

இந்து உயர் கௌரவமான குடும்ப 1969 ஆம்ஆண்டு பிறந்த 7 இல் செவ்வாய் உள்ள (கிரகபாவம்10) கனடாவில் தொழில் புரியும் தமது மகனுக்கு உள்நாட்டிலோ, அன்றி வெளிநாட்டிலோ படித்த அழகான மணமகளைப் பெற்றோர் எதிர்பார்க்கின்றனர். தொடர்பு: இராஜேஸ்வரி பல் பொருள் வாணிபம், கோட்டடி, சாவகச்சேரி.

(சி/2173)

### எழுதுநர் பதவி

எழுதுநர் பதவிக்கும் அதனைச்சார்ந்த பதவிகளுக்குமாக நடத்தப்படவுள்ள பரீட்சைக்கான மாதிரி வினாத்தாள்கள், விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம். Bond யாழ். நகர்.

(51483)

### புலமைப்பரிசில்

புலமைப்பரிசில் 1998 பயிற்சிப் பரீட்சை வினாத்தாள்கள், விடைகளுடன் பெற்றுக் கொள்ளலாம். Bond யாழ்ப்பாணம்.

(51482)

## ஓராண்டு நினைவஞ்சலி



| மண்ணில்: | விண்ணில்: |
|---|---|
| 08 | 11 |
| 10 | 12 |
| 1929 | 1996 |

### ஏரம்பு சின்னத்தம்பி

[சரசாலை]

திதி; பிரதமை

அன்பின் திருவுருவாய்
அணையாத ஒளி விளக்காய்
பண்பின் இலக்கணமாய்
பாசத்தின் உறைவிடமாய்
இன்மொழி பேசியே
இதமாய்ப் பலருடனே
நன்னெறி காட்டிய
நற்பெருந் தெய்வமே!

குடும்பத்தினர்.

மாசார்,
பளை.

(51416)

## ஹட்டன் நஷனல் வங்கி வெற்றிக்கிண்ண சுற்றுப்போட்டி 1997

### மாபெரும்கூடைப்பந்தாட்ட இறுதிப்போட்டி

இடம்: யாழ். சம்பத்தரிசியார் கல்லூரி விளையாட்டுக்கிடல்

திகதி: இன்று ஞாயிற்றுக்கிழமை (30 - 11 - 1997)

நேரம்: பி. ப. 2.30

(1) பாடசாலைகளுக்கிடையிலான போட்டி

**யாழ். பரி. யோவான் கல்லூரி**

எதிர்

**யாழ். சம்பத்தரிசியார் கல்லூரி**

(2) கழகங்களுக்கிடையிலான போட்டி

**யாழ். பல்கலைக்கழகம்**

எதிர்

**யாழ். பற்றீசியன் விளையாட்டுக் கழகம்.**

பிரதம விருந்தினர்: வண. பிதா A. I பேர்னாட் (அதிபர், சம்பத்தரிசியார் கல்லூரி.)

கூடைப்பந்தாட்ட இரசிகர்களை அன்புடன் அழைக்கின்றோம்.

### ஹட்டன் நஷனல் வங்கி

உங்கள் முன்னேற்றத்தின் பங்காளி

(சி/2202)

## ஊர்காவற்றுறை பிரதேச சபை

### லங்கா அசோக் லைடன் லொறியும், அதற்கான பவுசரும் முழுமையாகச் சீரமைக்கும் வேலைகளுக்கான

## கேள்வி அறிவித்தல்

மேற்படி வேலைக்கான கேள்விகள் 09.12.1997 நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக் கொள்ளப்படும். இதற்கான கேள்விப்பத்திரங்களை ஊர்காவற்றுறை பிரதேச சபை அலுவலகத்தில் 05.12.1997 நண்பகல் 12.00 மணிவரை மீளளிக்கக்கூடிய கேள்விவைப்புப்பணம் ரூபா 1000.00 ஐயும், மீளளிக்கப்படாத கேள்விப்பத்திரப் பணம் ரூபா 250.00 ஐயும் செலுத்துவதன் மூலம் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்விப் பத்திரங்களை இணைப்பிரதிகளில் தயாரித்து, மூலப்பிரதியை விசேட ஆணையாளர், ஊர்காவற்றுறை பிரதேச சபை, ஊர்காவற்றுறை என்ற முகவரிக்கும், இணைப்பிரதியை உள்ளூராட்சி உதவி ஆணையாளர், யாழ்ப்பாணம் என்ற முகவரிக்கும் அரக்கு முத்திரையிடப்பட்டுப் பதிவுத் தபாலில் அனுப்பப்பட வேண்டும். அல்லது அதற்கென அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உரிய நேரத்திற்கு முன் இடப்படவேண்டும். இது சம்பந்தமான நிபந்தனைகளையும், மேலதிக விவரங்களையும் இவ்வலுவலகத்தில் அலுவலக நேரங்களில் அறிந்து கொள்ளலாம். குறித்த வேலையை 31.12.1997 ற்கு முன்னர் செய்து வழங்க வேண்டும்.

ஜே. எக்ஸ் செல்வநாயகம்,
விசேட ஆணையாளர்,
ஊர்காவற்றுறை பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
ஊர்காவற்றுறை. 27.11.1997.

(சி/2206)

## முயற்சி

### அகதிகள் புனர்வாழ்வு நிறுவனத்திறன் விருத்தி மையம்

## சான்றிதழ் வழங்கும் வைபவம்

**01 - 12 - 1997** காலை 10 – 30 மணி

பிரதம விருந்தினர்;

**திரு. து. வைத்திலிங்கம்**
மேலதிக அரசாங்க அதிபர் செயலகம், யாழ்ப்பாணம்.

சிறப்பு விருந்தினர்கள்;

**திரு. க. சுந்தரேசன்**
உதவி ஆணையாளர், கமலநல சேவைகள் திணைக்களம்

**திரு. செ. ஜெயக்குமார்**
வடபிராந்திய அதிகாரி, தேசிய பயிலுநர் கைத்தொழில் சபை

எமது பயிற்சி நிலையத்தில் கல்விகற்கும் மாணவர்களையும், பழைய மாணவர்களையும் எம்முடன் இணைந்து பணியாற்றும் கிராமமட்ட நிறுவனங்களையும் அரச, அரசசார்பற்ற நிறுவனங்களையும் இந்நிகழ்வில் பங்கு பற்றிச் சிறப்பிக்குமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

**வீ. பி. சிவநாதன்**
செயலாளர்
அகதிகள் புனர்வாழ்வு நிறுவனம்

106, 4 ஆம் குறுக்குத் தெரு,
யாழ்ப்பாணம்.

(சி-2207)

## எமது இதய அஞ்சலி

திருமறைக்கலாமன்றத்தின் மூத்த உறுப்பினரும், முன்னாள் ஆலோசகரும், பிரபல வானொலிக் கலைஞருமான

### மிருதங்க வித்துவான் T. பாக்கியநாதன்

அவர்களின் மறைவினால் துயருறும் குடும்பத்தினர்க்கும், கலை உள்ளங்களுக்கும் எமது ஆழ்ந்த அனுதாபங்கள்.

**திருமறைக் கலாமன்றம்**

238, பிரதான வீதி,
யாழ்ப்பாணம்.

(சி-2212)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உதயன்

## துடிக்கும் உறவினர்

யாழ்ப்பாணக் குடாநாட்டில் கடந்த வருடம் நடுப்பகுதியில் இராணுவத்தினரால் கைது செய்யப்பட்ட பின்னர் காணாமற்போன 600 பேர்களில் அனேகமாக அனைவரும் படுகொலை செய்யப்பட்டிருக்க வேண்டும்.

இவ்வருடம் ஓகஸ்ட் மாதம், அரசாங்கத்தின் அனுமதியுடன் யாழ்ப்பாணக் குடாநாட்டுக்கு வந்த தனது தூதுக்குழு திரட்டிய தகவல்களை அடிப்படையாக வைத்து சர்வதேச மன்னிப்புச்சபை மேற்படி முடிவுக்கு வந்திருக்கிறது.

''யாழ்ப்பாணத்தில் இடம்பெற்ற பரந்தளவிலான காணாமற்போதல் குறித்து அரசாங்கத்தின் நடவடிக்கை'' என்ற தலைப்பில் இம்மாதம் 27 ஆம் திகதி சர்வதேச மன்னிப்புச் சபை பதினாறு பக்க அறிக்கை ஒன்றை வெளியிட்டது.

அந்த அறிக்கையில், படையினரால் கைது செய்யப்பட்ட இளைஞர்களும் ஏனையோரும் எவ்வாறு கொடூரமான முறையில் சித்திரவதை செய்யப்பட்டார்கள்; வேண்டுமென்றே படுகொலை செய்யப்பட்டார்கள் என்பனவற்றை வெளிப்படுத்தும் விதத்தில் அமைந்த பலரது வாக்குமூலங்கள் சேர்க்கப்பட்டுள்ளன.

கொலை செய்யப்பட்டோரின் சடலங்கள் பயன்படுத்தப்படாத கிணறுகளுக்குள்ளும், மலசலகூடக் குழிகளுக்குள்ளும் போடப்பட்டதாகவும் அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

படையினரின் கொடுமையான சித்திரவதைக்குப் பின்னர் மலசலகூடக் குழிக்குள் போடப்பட்ட ஓர் இளைஞர் தெய்வாதீனமாகத் தப்பி வந்தார். அவரது வாக்கு மூலம் அறிக்கையில் சேர்க்கப்பட்டுள்ளது.

தமது பிள்ளைகளுக்கும், கணவன்மார்களுக்கும், சகோதரர்களுக்கும் என்ன நடந்ததோ என்று பதற்றப்பட்டுக் கொண்டிருக்கும் தாங்க முடியாத மனவேதனையுடன் நாள்களைக் கழித்துக் கொண்டிருக்கும் பெற்றோரை, மனைவிமாரை, உறவினரை மன்னிப்புச் சபையின் அறிவிப்பு மேலும் சஞ்சலப்பட வைத்துள்ளது.

கைது செய்யப்பட்டோர் காணாமற் போனவர்களாக்கப்பட்டமை பெரும் மனித உரிமை மீறல் என்பதும்—

இத்தகைய கொடுமைகளைத் தடுப்பதற்கு அரசு ஆக்கபூர்வமான, உருப்படியான நடவடிக்கைகளை மேற்கொண்டதா, மேற்கொள்கின்றதா, மேற்கொள்ளுமா என்பதும் — ஒரு புறமிருக்க,

தங்கள் பிள்ளைகளுக்கு, உறவினர்களுக்கு என்ன நடந்தது என்று அறியமுடியாததால் விரக்தி அடைந்துள்ளவர்களின் விவகாரம் பெரும் மனிதாபிமானத்துடன், மனித நேயத்துடன் நோக்கப்பட வேண்டியதாகும்.

மன்னிப்புச் சபையின் அறிக்கை பாரபட்சமானது என்று அறிக்கை வெளியிடுவதில் காட்டப்படும் அவசரமும், வேகமும் காணாமற்போனவர்களுக்கு என்னாயிற்று என்ற தகவலையேனும் வெளியிடுவதில் காட்டப்படவில்லை.

அரசுக்கும் அதிகாரிகளுக்கும் படிமுறைகள், செய்முறைகள் அவசியமானவைகளாக இருக்கலாம், ஆனால் பாதிக்கப்பட்டவர்களுக்கு தங்கள் பிள்ளைகளுக்கு என்ன நடந்தது என்ற தகவலே முக்கியமும் அவசரமானதும் ஆகும்.

தமிழர்கள் சம்பந்தப்பட்ட எந்த விடயத்திலும் தட்டிக் கேட்க எவருமில்லை என்று நினைத்து அரசும் அதிகாரிகளும் இப்படி நடந்து கொள்கிறார்களா? இத்தகைய செயல்கள், தமிழர்கள் இந்நாட்டின் பிரஜைகள் அல்லர் என்று நிலைநாட்ட எடுக்கும் முயற்சிகளில் ஒன்றாகவே கருதப்பட வேண்டும்.

# அரச ஊழியரின் வினைத்திறனை பரிசோதிக்க குழு யாழ். வருகிறது

### ஜனாதிபதியின் உத்தரவின் பேரில்

யாழ்ப்பாணம், நவ. 30

யாழ். மாவட்ட அரச ஊழியர்களின் வினைத்திறனைப் பரிசோதனை செய்ய கொழும்பிலிருந்து உயரதிகாரிகள் குழு யாழ். வர உள்ளது.

கொழும்பிலிருந்து யாழ். திரும்பிய அரச அதிபர் க. சண்முகநாதன் இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதியின் பணிப்புரையின் பேரில் இக்குழு எதிர்வரும் 12 ஆம் திகதி இங்கு வரும்.

இங்குள்ள திணைக்களங்களைச் சேர்ந்த அரச ஊழியர்களினது செயற்பாடுகளை நேரில் கவனித்து அவர்களின் வினைத்திறன் தொடர்பான அறிக்கையினை இக்குழு தயாரிக்கும்.

குழுவின் அறிக்கையின் அடிப்படையிலேயே இனி வரும் காலங்களில் அரச ஊழியர்களின் பதவி உயர்வுகள் தீர்மானிக்கப்படும்.

பதவி உயர்வு பெறுகின்ற அரச ஊழியர்கள் பலர் அப்பதவிக்கான வினைத்திறனைக் கொண்டிருப்பதில்லை என்று தெரிவிக்கப்பட்டு வரும் குற்றச்சாட்டை அடுத்தே ஜனாதிபதி இக் குழுவை இங்கு அனுப்ப உத்தரவிட்டதாகத் தெரிய வந்தது.

## பிரிவுபசார விழா

நெல்லியடி, நவ.30

யாழ். கால்நடை வைத்திய அத்தியட்சகராகப் பணிபுரிந்து, வடக்கு — கிழக்கு மாகாண கால்நடை உற்பத்தி சுகாதார திணைக்களத்தின் பணிப்பாளராக பதவி உயர்வு பெற்றுச் செல்லும் டாக்டர் எம். தங்கராசாவின் சேவையைக் கௌரவித்து, பருத்தித்துறை கால்நடை வைத்தியர் பணிமனையில் இன்று ஞாயிறு காலை 10 மணிக்கு பிரிவுபசார விழா நடைபெறவிருக்கின்றது.

(ஐ-109)

## ஊனமுற்றோர் தினத்தை ஒட்டி நிகழ்ச்சிகளை நடத்தப் பணிப்பு

### பிரதேச செயலர்களுங்கு சுற்றறிக்கை

கொழும்புத்துறை, நவ.30

டிசம்பர் 3ஆம் திகதி சர்வதேச ஊனமுற்றோர் தினமாகும்.

இதனையொட்டி இவ் வருடமும் இத்தினத்தைக் குறிக்குமுகமாக சகல பிரதேச செயலகங்களிலும் சிறப்பு நிகழ்ச்சிகளை நடத்துமாறு அனைத்துப் பிரதேச செயலாளர்களுக்கும் வடக்கு கிழக்கு மாகாண சமூக சேவைப் பணிப்பாளர் திருமதி க. சிவசிதம்பரம் சுற்றறிக்கை மூலம் அறிவித்துள்ளார்.

வழமை போல் அரசசார்பற்ற நிறுவனங்களின் ஒத்துழைப்புடன் பிரதேசங்களிலுள்ள அனைத்து இயலாதோரையும் அழைத்து அவர்களுக்காக, அவர்களைக் கொண்டு கலை நிகழ்ச்சிகள், போட்டிகள் என்பனவற்றை நடத்தி பரிசில்களை வழங்கி அவர்களை மகிழ்விப்பதுடன் நிகழ்ச்சிகளில் பொதுவாக இயற்கையான ஊனமுறுதலைத் தடுக்கும் மருத்துவ ஆலோசனைகளைக் கொண்ட பேச்சுக்களைச் சேர்ந்துக் கொள்ளுமாறும் அறிவுறுத்தப் பட்டுள்ளது.

பரிசில்களை வழங்குவதற்காக பிரதேசசெயலகங்களுக்கு தலா ஆயிரத்து 500 ரூபா நிதி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. (ஐ-30)

## கிராம அலுவலர் பதவி உயர்வு நேர்முகப்பரீட்சை செயலகத்தில்

யாழ்ப்பாணம், நவ. 30

கிராம சேவையாளர்களை தரம்1இற்கு பதவி உயர்த்துவதற்கான நேர்முகப்பரீட்சை எதிர்வரும்4 ஆம் ,5 ஆம் திகதிகளில் யாழ். செயலகத்தில் நடைபெற உள்ளது,

நேர்முகப்பரீட்சைக்கு 44 கிராம சேவையாளர்கள் தெரிவு செய்யப்பட்டுள்ளனர். கடந்த சில மாதங்களின் முன்னர் இவர்களுக்கான நேர்முகப்பரீட்சையை அநுராதபுரத்தில் நடத்த ஒழுங்குகள் செய்யப்பட்டிருந்தன. ஆனால் போக்குவரத்தில் காணப்பட்ட பிரச்சினைகளினால் தெரிவு செய்யப்பட்ட கிராம சேவையாளர்கள் அங்குசெல்லவில்லை.

அண்மையில் கொழும்பு சென்ற யாழ். அரச அதிபர் க. சண்முகநாதன் இந்த நேர்முகப்பரீட்சையை இங்கேயே நடத்துவதற்கு ஏற்பாடு செய்திருந்தார்.

முல்லைத்தீவு மாவட்ட அரச அதிபர் ஆர். தர்மகுலசிங்கம் தலைமையிலான குழுவினரே இந்த நேர்முகப்பரீட்சையை யாழ். செயலகத்தில் நடத்தவுள்ளனர்.

(ஐ-9)

## கொழும்பில் இருந்து கோழி முட்டை

யாழ்ப்பாணம், நவ. 30

கொழும்பிலிருந்து தற்போது யாழ்ப்பாணத்திற்கு முட்டை வந்து சேர்ந்துள்ளது. தனியார் வியாபாரிகள் முட்டையை எடுத்து வந்துள்ளதால் அடுத்த சில தினங்களில் முட்டையின் விலை வீழ்ச்சியடையும் என எதிர்பார்க்கப்படுகிறது.

கோழித் தீனி கொழும்பு விலையில் இருமடங்காக யாழ்ப்பாணத்தில் விற்கப்படுகின்ற இந்த நேரத்தில் கொழும்பிலிருந்து முட்டை கட்டுப்பாடின்றி வருமேயாயின் பண்ணையாளர்கள் கோழி வளர்ப்பைக் கைவிட வேண்டிய நிலை ஏற்படும் என கோழிப்பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர்.

(ஐ-4)

## மாணவிக்கு புலமைப்பரிசில்

யாழ்ப்பாணப்பல்கலைக்கழகத்தின் திருமதி முத்துக்குமாரி ஞாபகார்த்த புலமைப் பரிசில் தெல்லிப்பழை துர்க்காபுரம் மகளிர் இல்லத்தைச் சேர்ந்த செல்வி தவனேஸ்வரி தங்கவேலு என்பவருக்குக் கிடைத்துள்ளது. இவர் உடுவில் இராமநாதன் கல்லூரியின் பழைய மாணவியாவார். (ஐ-152)

## சுகாதாரத் தொண்டர்களுங்கு 'எய்ட்ஸ்' பற்றிய பயிற்சி நெறி

யாழ்ப்பாணம், நவ. 30

நாளை திங்கட்கிழமை 'உலக எய்ட்ஸ்தினம்' ஆகும்.

இதனையொட்டி யாழ். மாநகர சுகாதாரப் பகுதியினர் சுகாதாரத் தொண்டர்களுக்கான பயிற்சி நெறி ஒன்றை ஐ. நா. சிறுவர் நிதியத்தின் உதவியுடன் நடத்தவுள்ளனர்.

50 சுகாதாரத் தொண்டர்கள் கலந்து கொள்ளும் இந்த 6 நாள் பயிற்சி நெறி நாவலர் கலாசார மண்டபத்தில் நடைபெறும்.

இது தொடர்பாக யாழ். மாநகர சுகாதார வைத்திய அதிகாரி டாக்டர் இ. தெய்வேந்திரன் விடுத்த பத்திரிகைக் குறிப்பு வருமாறு:-

எய்ட்ஸ் நோய் இலங்கை போன்ற நாடுகளுக்கு எதிர்காலத்தில் ஒரு பாரிய சுகாதாரப் பிரச்சினையாக மாறக்கூடியதாக உருவெடுத்துள்ளது. தற்சமயம் உள்ள தகவல்களின்படி இலங்கையில் 175 பேருக்கு மேல் எய்ட்ஸ் தொற்று இனம் காணப்பட்டு அதில் 60 பேர் மரணமடைந்திருக்கின்றார்கள்.

நோய் பரம்பல் பற்றிச் சரியான தகவல்கள் இல்லாதமையினால் உலகச் சுகாதார நிறுவனத்தின் மதிப்பீட்டில் 60 ஆயிரம் தொடக்கம் 10 ஆயிரம் பேர் வரை இருக்கலாம் என்று மதிப்பிடப்பட்டுள்ளது..

2 ஆயிரமாம் ஆண்டளவில் ஆசியாக் கண்ட நாடுகளில் இதன் தாக்கம் வெகுவாகக் காணப்படும் என்று எதிர்பார்க்கப்படுகின்றது. தற்பொழுதுள்ள நோய் சம்பந்தமான தகவல்கள், ஆய்வுகளின் படி இந்நோயைக் குணமாக்க மருந்தோ, தடுக்கத் தடை மருந்தோ இல்லை. ஆனால், தொற்று வராமல் தடுக்கும் நடவடிக்கைகளை மக்கள் பின்பற்றுவதன் மூலமே நோயிலிருந்து தம்மைக் காப்பாற்றிக் கொள்ள முடியும்.

''எய்ட்ஸ் நோய் — அறியாமையினால் மரணிக்காதே'' என்ற கருப்பொருளாக வைத்து எமது பகுதியில் சுகாதாரக்கல்வி நடவடிக்கைகள் தற்போது மேற்கொள்ளப் படுகின்றன.

இதன் ஓர் அம்சமாக உலக எய்ட்ஸ் தினமான நாளை திங்கட்கிழமை நாவலர் மண்டபத்தில் 50 சுகாதாரத் தொண்டர்களுக்கான 6 நாள் பயிற்சி நெறி ஆரம்பிக்கப்படும்.

இது ஐக்கிய நாடுகள் சிறுவர் நிதியத்தின் உதவியுடன் நடத்தப்படுகின்றது— என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

## நாளை

**கார்த்திகை 16**

திங்கட்கிழமை

திதி: பிரதமை

முற்பகல் 8.29 வரை.

நட்சத்திரம்: கேட்டை

பிற்பகல் 2.05 வரை.

சுபநேரம்: 12.14-1.44

ராகுகாலம் 7.44-9.14

(பகலுக்கும் இரவுக்கும் பழைய நேரப்படி)

# மானிட மகனின் வருகைக்காக எமது உள்ளத்தை வளமாக்குவோம்

### ஞாயிறு நற்பிரசாதம்

ஒரு நிகழ்வு எம் மத்தியிலே நிகழப்போகின்றது என்றால் உடனே நாம் அதற்கான ஆயத்தங்களைத்தான் கவனிப்போம். ஆயத்தம் என்பது இரண்டு முறைகளில் நடைபெற்றால் தான் அந்நிகழ்வுசிறப்புற அமையும். ஒன்று அக ஆயத்தம் மற்றையது புறஆயத்தம். ஆண்டவன் இயேசுவின் வருகைக்கு எம்மை தகுதியுள்ள முறையிலே தயாரிப்பதற்கு ஏற்ற காலமே இத்திருவருகைக் காலமாகும்.

நீதியின் தளிர் ஒன்றை முளைக்கச்செய்வேன். அவர் நாட்டில் நீதியையும், நேர்மையையும் நிலைநாட்டுவார் (எரே. 33: 15) — என்று எரேமியாஸ் ஆகமத்திலே கூறப்பட்டுள்ளது. அவர் அவருக்குரியது அவரவருக்குக் கொடுக்கப்பட வேண்டும், அதையே நீதி என்போம். ஆண்டவன் இயேசு நீதியின் தளிராக சித்திரித்துக் காட்டப்படுகின்றார்.

சமுதாயத்திலே அநீதி நடந்த பொழுது பாவிகள் புறக்கணிக்கப்பட்ட பொழுது உடல் ஊனமுற்றோர், ஏழைகள் வெறுத்து ஒதுக்கப்பட்டபொழுது, இயேசு அவர்களில் நீதியின் தளிராக முளைத்தெழுகின்றார். சமுதாயத்திலே உயர்ந்தவர்கள் ,சட்ட வல்லுநர்கள், மறைநூல் அறிஞர்கள் நீதியின் பக்கம் சார்ந்து நடவாதபொழுது அது அநீதி என்று நீதியின் தளிராகிய இயேசு முழங்குகின்றார்.

இறைவன் என்னும் மரத்திலிருந்து நீதியின் தளிராக இயேசு முளைத்தெழுகின்றார். இத் தளிர் பெரு விருட்சமாக மேன் மேலும் செழித்தோங்க நீராக, பசளையாக, நீ இருக்க விரும்புகிறாயா? என்று இறைவன் கேட்கின்றார்.

நீதியையும், நேர்மையையும் எம் மத்தியிலே செழித்தோங்கச் செய்வதன் மூலம் இயேசு எம் மத்தியிலே வருவதற்கு நாம் ஒவ்வொருவரும் நிழல் கொடுக்கின்றோம். இடம் கொடுக்கின்றோம்.

[illegible] அவரின் நாள் நெருங்கும் வேளையிலே இயேசுவின் வருகைக்கு தடைக்கற்களாக இருப்பவற்றை வெறுத்து ஒதுக்குவோம், 'உங்கள் உள்ளங்கள் குடிவெறி களியாட்டத்தாலும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய கவலையினாலும் மந்தம் அடையாதவாறு .. எச்சரிக்கையாயிருங்கள்'' (லூக் .21: 34 35) என்று இயேசு கூறுகின்றார்,

மானிட மகனின்வருகைக்கு எம் ஒவ்வொருவரையும் தயாரிப்போம். நீதியின் தளிராக நேர்மையை நிலைநாட்டுபவராக வருகின்ற இயேசுவோடு நாமிணைந்து நீதிக்கு குரல் கொடுப்போம். நேர்மையை எம் வாழ்வாக்குவோம். குடிவெறியாலும் களியாட்டத்தாலும் எம் உள்ளங்கள் மந்தமடையாது காத்துக்கொள்ளுவோம்.

அப்போதுதான் நாம்விரும்புகின்ற இயேசு எம்முள்ளத்திலே பிறப்பார். அவரின் பிறப்புக்கு எம்முள்ளங்களும் பண்படுத்தப்பட்டுவளமுள்ளநிலங்களாக மாறி செழிப்புள்ள பலனளிக்கும் நிலைக்கு எம்மை மாற்றும். அவ்விடத்திலே தான் மானிட மகனின் பிறப்பிற்கான ஆயத்தமும் அர்த்தம் பெறும்.

அருட்திரு.
செ. யூட்அமலதாஸ்,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் கைதிகள் விவகாரம் குறித்து

# ஜனாதிபதிக்கு அவசரச் செய்தி!

## கூட்டணி எம்.பி. அனுப்பினார்

மட்டக்களப்பு, நவ. 30
கொழும்பு மகஸீன் சிறைச்சாலையில் உண்ணாவிரதம் இருந்து வந்த தமிழ் அரசியல் கைதிகள் பலவந்தமான முறையில் களுத்துறைச் சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்ட சம்பவம் குறித்து மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் நேற்றிரவு ஜனாதிபதியின் கவனத்துக்குக் கொண்டு வந்தார்.

இது தொடர்பாக அவர் நேற்றிரவு அனுப்பியுள்ள அவசர ''பக்ஸ்'' தகவலில் 'பத்திரிகையாளர்களின் பிலிம் சுருள் பறிக்கப்பட்ட சம்பவம் குறித்தும் பிரஸ்தாபித்துள்ளார்.

அவரது ''பக்ஸ்'' விவரம் வருமாறு:

கொழும்பு மகஸீன் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள தமிழ் அரசியல் கைதிகளின் உண்ணாவிரதம் குறித்து நேற்றுக் காலை அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸின் கவனத்துக்கு கொண்டு வந்தேன்.

உண்ணாவிரதப் போராட்டக்காரர்கள் உடனடியாக களுத்துறை சிறைச்சாலைக்கு இடமாற்றம் செய்யப்பட்டதை மிக மன வருத்தத்துடன் தங்கள் கவனத்துக்குக் கொண்டு வருகின்றேன்.

பத்திரிகையாளர்கள் இது தொடர்பான தகவல்களைத் திரட்ட விரைந்தபோது பிலிம் சுருள் பறிமுதல் செய்யப்பட்டது.

தமிழ் உண்ணாவிரதிகளின் கோரிக்கைகள் நியாயமானவை. அதாவது உடனடி விசாரணை 'மேற்கொண்டு குற்றமற்றவர்கள் விடுதலை செய்யப்படவேண்டும். குற்றவாளிகள் மீது நீதிவிசாரணை தேவை என்பது தான் இவர்களின் கோரிக்கையாகும்.

நீண்ட காலமாக விசாரணை இன்றி தடுத்து வைக்கப்பட்டமையால் நொந்து போயுள்ள கைதிகளின் உளரீதியான தாக்கத்தை சிறைச்சாலை அதிகாரிகள், பொலீஸார் ஆகியோரின் நடவடிக்கைகள் மேலும் அதிகரிக்கச் செய்வதாக அமைகின்றது.

கைதிகளின் சிறைச்சாலை இடமாற்றம், சட்டரீதியாக நியாயமான தீர்வு கிடைக்காது என்பதைக் கைதிகளுக்கு உறுதிப்படுத்துவதாக அமைகின்றது.

இந்நடவடிக்கை மனித உரிமை மீறல்களிலிருந்து பாதுகாப்பு, அடிப்படை மனித உரிமைகளை உறுதிப்படுத்தல் என்ற தங்களின் உண்மையான முயற்சிகளைப் பாதிப்பதாக அமைகின்றது.

இந்நிலையில் இவ்விவகாரத்தில் தலையிட்டு மனிதஉரிமைகள் மீறல்களினால் மேலும் அவர்கள் பாதிக்கப்படாமல் இருப்பதை உறுதிப்படுத்துவதோடு அவர்கள் மீதான விசாரணைகளைத் துரிதப்படுத்துமாறு கோருகிறேன்.

பத்திரிகையாளர் விடயத்தில் பொலீஸ், சிறைச்சாலை உத்தியோகத்தர்கள் நடந்து கொண்ட விதம் கைதிகளின் நியாயமான போராட்டத்தை மூடிமறைக்கும் செயல் என்பதை நியாயப்படுத்துகின்றது.''

இப்படி அவர் தெரிவித்துள்ளார். (இ-21)

## நீரிழிவு பிரசுரம்

சண்டிலிப்பாய், நவ. 30
மானிப்பாய் லயன்ஸ் சழகம் நீரிழிவு நோய் பற்றிய பிரசுரம் ஒன்றை வெளியிட்டுள்ளது. இக்கழகத்தின் சுகாதார, சுற்றாடல் பாதுகாப்பு செயற்றிட்ட தலைவர் டாக்டர் சோ. சுந்தரராஜன் இதனைத் தொகுத்து வெளியிட்டுள்ளார்.

இதேவேளை இக்கழகம் இப் பகுதியிலுள்ள சன சமூக நிலையங்களின் அனுசரணையுடன் இலவச நீரிழிவு, இரத்த அழுத்த நோய்களுக்கான பரிசோதனைகளையும் நடத்தி வருகின்றது. (ஐ-135)

## ரயில்...

(முதலாம் பக்கத் தொடர்)
சிறுமி உட்பட 3 பேர் பலியானார்கள். 19 பேர் காயங்களுடன் காலி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்.

நேற்று பிற்பகல் 1.45க்கு காலி போப்பாவே பாலம் மேலாக இந்த ரயில் சென்று கொண்டிருந்த சமயமே ரயிலின் நான்கு பெட்டிகள் பாதையை விட்டுவிலகி தடம்புரண்டதாக ரயில்வே திணைக்களம் தெரிவித்தது.

4 பெட்டிகளில் கடைசிப் பெட்டி தண்டவாளத்தில் இருந்து பாலத்தின் கீழ் விழுந்தது என்றும் —

அதில் இருந்தவர்களிலேயே மூவர், இறந்தனர் என்றும் தெரிவிக்கப்பட்டது. (இ-21)

## [illegible]...

(முதலாம் பக்கத் தொடர்)
திரும்பவும் ஒப்படைக்கப் பட்டதாகவும் —

செய்தியாளர்களான எம். டன்ஸ்ரன் மற்றும் எஸ். ஸ்ரீகஜன் ஆகியோர் எச்சரிக்கப்பட்டனர் என்றும் தெரிவிக்கப்பட்டது.

சிறைக்கைதிகளின் உண்ணாவிரதம் அவர்கள் களுத்துறைச் சிறைச்சாலைக்கு மாற்றப்பட்டது, புகைப்படப் பிடிப்பாளரின் பிலிம்சுருள் பறிக்கப்பட்டது ஆகியவை குறித்து மட்டக்களப்பு மாவட்ட தமிழர் விடுதலைக் கூட்டணி நாடாளுமன்ற உறுப்பினர் ஜோசப் பரராஜசிங்கம் ஜனாதிபதிக்கு பக்ஸ் மூலம் செய்தி அனுப்பினார்.

இதற்கு முன்னர் அவர் நீதி. அரசமைப்பு விவகார அமைச்சர் பேராசிரியர் ஜி. எல். பீரிஸுக்கும் தகவல் அனுப்பி இருந்தார். (இ-21)

## பாடசாலை பைகள் அன்பளிப்பு

சண்டிலிப்பாய், நவ. 30
மானிப்பாய் கோவிற்பற்று லியோ சழகம் நவாலி மகேஸ்வர இல்லத்திலுள்ள மாணவர்களுக்கு 20 பாடசாலைப் பைகளை அன்பளிப்பாக வழங்கியுள்ளது. அத்துடன் மானிப்பாயிலுள்ள தெல்லிப்பழை அரசினர் வைத்திய சாலை உளநலச் சங்கத்தின் நூல் நிலையத்திற்கு 150 புத்தகங்களையும் அன்பளிப்புச் செய்துள்ளது,

சுதுமலை வடக்கு தமிழ்க் கலவன் பாடசாலையில் மலசல கூடமொன்றும் லியோ கழகத்தினரால் புனரமைப்பு செய்யப்பட்டுள்ளது. (ஐ-135)

## அருத்த...

(முதலாம் பக்கத் தொடர்)
தைக் காட்டிலும் இன்னமும் 128 உறுப்பினர்களின் ஆதரவு தேவைப்படும்.

குஜ்ரால் தாம் பதவி விலகியபோது மக்களவையைக் கலைக்கும்படி பரிந்துரை செய்யாததால் எல்லோருடைய கவனமும் ஜனாதிபதியின் மாளிகையின் பக்கமே திரும்பியுள்ளது.

இன்னும் ஒரிரு நாள்களுக்குள் 11 ஆவது மக்களவையில் 18 மாதங்களில் 4 ஆவது பிரதமர் பதவியேற்பாரா? அல்லது 12 ஆவது மக்களவைக்கு பொதுத் தேர்தல் அடுத்த சில மாதங்களில் வருமா? என்பது தெரிந்து விடும் என்று கூறப்படுகிறது. (இ-5)

## கல்முனையில் குண்டு!

கல்முனை இராமகிருஷ்ண மிஷன் சந்தியில் நேற்றுக் காலை பொலீஸாரால் குண்டு ஒன்று கண்டுபிடிக்கப்பட்டு செயலிழக்க வைக்கப் பட்டது.

அதே நேரம் ஆரையம்பதியில் உள்ள ரெலோ அலுவலகம் மீது விடுதலைப் புலிகள் மேற்கொண்ட மோட்டார் தாக்குதல் முறியடிக்கப் பட்டதாக ரெலோ தரப்பில் தெரிவிக்கப்பட்டது. (இ-21)

## நினைவு நாள்

மருதனார்மடம் இராமநாதன் கல்லூரி நிறுவுநர் நினைவு நாளும் பரிசளிப்பு விழாவும் இன்று ஞாயிற்றுக்கிழமை முற்பகல் 9 மணிக்கு கல்லூரி மண்டபத்தில் கல்லூரி அதிபர் திருமதி ஆ. சிவஞானசுந்தரம் தலைமையில் நடைபெறும்.

யாழ். மேலதிக அரச அதிபர் து.வைத்திலிங்கம் பிரதம விருந்தினராக கலந்து கொள்வார்.

யாழ். பல்கலைகழக சமஸ்கிருதத்துறைத் தலைவர் பேராசிரியர் வி. சிவசாமி நிறுவுநர் நினைவுப் பேருரை யாற்றுவார். (ஐ-152)

# முஸ்லிம் மீனவர்கள் விடுதலைக்கு பிரதேச சபை பாராட்டும் நன்றியும்

அம்பாறை, நவ. 30
திருகோணமலை மாவட்டத்தைச் சேர்ந்த இறக்கக் கண்டியிலிருந்து கடந்த ஜூலை மாதம் 2 ஆம் திகதி கடத்திச் செல்லப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட முஸ்லிம்களை (3 சிங்களவர்கள் உட்பட) எவ்வித நிபந்தனையுமின்றி தமிழீழ விடுதலைப் புலிகள் விடுதலை செய்துள்ளமைக்கு கிழக்கிலங்கையைச் சேர்ந்த சம்மாந்துறை பிரதேச சபை பாராட்டும், நன்றியும் தெரிவித்துள்ளது.

சம்மாந்துறை பிரதேச சபையின் மாதாந்த செயலமர்வு கடந்த வியாழக்கிழமை தவிசாளர் அல்ஹாஜ் ஐ. எம். இப்றாகீம் தலைமையில் நடைபெற்றபோது, இறக்கக் கண்டி முஸ்லிம்களின் விடுதலை தொடர்பாக விடுதலைப் புலிகளுக்கு நன்றிதெரிவிக்கும் பிரேரணை ஏகமனதாக நிறைவேற்றப்பட்டது.

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் ஆட்சியிலிருக்கும் இந்தப் பிரதேச சபையின் மாதாந்த செயலமர்வில் ஐக்கிய தேசியக் கட்சி உறுப்பினர் எம். ஏ. ஏ. ஜப்பார் மேற்படி நன்றி தெரிவிக்கும் பிரேரணையை முன்மொழிந்தார்.

உறுப்பினர் ஜப்பார் பிரேரணையை முன்மொழிந்து உரையாற்றுகையில்,

''இறக்கக் கண்டியிலிருந்து கடத்தப்பட்டு தடுத்து வைக்கப்பட்ட முஸ்லிம்களின் விடுதலை எமக்குப் பெருமகிழ்வைத் தருகின்றது. விடுதலைப் புலிகள் இது விடயத்திலேயே மிக நிதானமாகவும் மனிதாபிமானத்துடனும் நடந்துள்ளனர்.

இந்த நாட்டின் சிறுபான்மை இனங்களான தமிழர்களும், முஸ்லிம்களும் பெரும்பான்மையினரால் நசுக்கப்பட்டே வந்துள்ளனர்.

இந்நிலையில் சிறுபான்மையினராகிய தமிழர்களும், முஸ்லிம்களும் முட்டி மோதிக் கொள்வதில் எவ்வித பயனுமில்லை. தமிழர்களும், முஸ்லிம்களும் ஒன்றுபட்டு வாழ்வதன் மூலமே எமது உரிமைகளை வென்றெடுக்க முடியும்.

எனவே வளர்ந்துவரும் தமிழ், முஸ்லிம் நல்லுறவுகளுக்கு மத்தியில் தமிழீழ [illegible] சமிக்ஞைகளைக் காட்டி வருகின்றனர். [illegible] மாக இறக்கக் கண்டி முஸ்லிம்களின் விடுதலையும் அமைந்திருக்கின்றது.

இதனையிட்டு நாம் மகிழ்வு கொள்வதுடன், எதிர் காலத்திலும் தமிழீழ விடுதலைப் புலிகள் முஸ்லிம்கள் தொடர்பாக வலுவான நம்பிக்கைக்கும், பரஸ்பரம் நல்லுறவுக்குமான நிலைப்பாட்டைக் கையாள வேண்டும்.

இறக்கக்கண்டி முஸ்லிம்களின் விடுதலை தொடர்பாக புலிகள் நடந்து கொண்டுள்ள நல்ல நிலைமை குறித்து நமது சபை மகிழ்வு அடைவதுடன், விடுதலைப் புலிகளுக்கு நன்றியும் தெரிவிக்க வேண்டும் என்றார்.

பிரேரணையை ஆதரித்து தவிசாளர் ஐ. எம். இப்றாகீம் (மு. கா.), உறுப்பினர் கே. எல். ஏ. சலீம் (ஐ. தே. க.), ஆகியோரும் உரையாற்றினர். (இ-14)

# தேர்தல் முறைகேடு தொடர்பான விசாரணை அறிக்கைசமர்ப்பிப்பு

1994 ஆம் ஆண்டு மார்ச் மாதம் முதலாம் திகதி கிழக்கில் நடந்த உள்ளூராட்சித் தேர்தலிலும், 1994 ஆம் ஆண்டு ஒகஸ்ட் மாதம் 14 ஆம் திகதி நடந்த பொதுத் தேர்தலிலும் இடம்பெற்ற ஊழல் மற்றும் மோசடிகள் பற்றி ஆராய நியமிக்கப்பட்ட விசேட ஜனாதிபதி ஆணைக்குழு தனது அறிக்கையை வெளியிட்டுள்ளது.

அநுராதபுரம் மேல் நீதிமன்ற நீதிவான் பி.எல். சமரவீரவின் தலைமையிலான இந்த ஆணைக்குழு ஜனாதிபதியிடம் தனது அறிக்கையை நேற்று முன்தினம் கையளித்தது.

அலரிமாளிகையில் நடந்த இந்த வைபவத்தில் ஜனாதிபதியின் செயலாளர் பாலபட்ட பென்டியும் கலந்து கொண்டார். (ஐ-3)

# மாவட்டங்கள் தோறும் கலைப் பயிற்சி மையங்கள்

அச்சுவேலி. நவ. 30
மாவட்டங்கள் தோறும் கலைப்பயிற்சி மையங்கள் நிறுவப்படவுள்ளன.

கலைப்பயிற்சி மையங்களை வடக்கு - கிழக்கில் உள்ள மாவட்டங்கள் தோறும் நிறுவுவது தொடர்பான ஏற்பாடுகளை வடக்கு - கிழக்கு மாகாண கல்வி கலாசார விளையாட்டுத்துறைஅமைச்சு மேற்கொண்டு வருகின்றது.

கலைப் பயிற்சி மையத்தின் மூலம் பாடசாலைக் கல்வியை முடித்துக் கொண்டு வெளியேறிய கலை ஆர்வம் உள்ள இளைஞர் யுவதிகளுக்கு பிரதேசங்களை இனங் கண்டு வெளிப்படுத்தும் பயிற்சி அளிக்கப்படவுள்ளது. (ஐ-11)

## தராசுபடிகளுக்கு முத்திரையிடல்

கொழும்புத்துறை, நவ. 30
கோப்பாய் பிரதேச சபை உப அலுவலகத்தில் நாளை முதல் எதிர்வரும் 5 ஆம்திகதி வரை காலை 9மணி தொடக்கம் 1.30 மணி வரை நிறுத்தல்-அளவை உபகரணங்களுக்கு முத்திரையிடும் பணி நடைபெறும்,

இச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தி உடுவில் பிரதேச சபை, நீர்வேலி பிரதேச சபை கோப்பாய் பிரதேச சபை ஆகிய அலுவலகங்களுக்கு உட்பட்ட சந்தை வியாபாரிகள், கடை உரிமையாளர்கள், பேக்கரி உரிமையாளர்கள், விறகு காலையைச் சேர்ந்த சகலரும் தவறாது தத்தமது தராசுப்படிகளுக்கும், நிறுவை அளவை உபகரணங்களுக்கும் முத்திரையிட்டுக் கொள்ளுமாறு யாழ் செயலக நிறுவை அளவைத்திணைக்களப் பரிசோதகர் வை. கிருஷ்ணதாசன் தெரிவித்துள்ளார். (ஐ-30)

## மோசமான நிலையில் தனங்கிளப்பு வீதி

கொழும்புத்துறை, நவ. 30
நாவற்குழியில் இருந்து தனங்கிளப்பு ஊடாகச் சாவகச்சேரி செல்லும் பிரதான வீதி சேதமுற்று குண்டும் குழியுமாக உள்ளதால் வாகனங்களில் செல்வோர் பெரும் சிரமங்களை எதிர் நோக்குவதாகத் தெரிவித்தனர்.

இவ் வீதி கடந்த பன்னிரண்டு வருடங்களுக்கு மேலாகத் திருத்தப்படாத நிலையில் உள்ளது. (ஐ-30)

உள்ளூர், வெளியூர், வெளிநாட்டு
தொலைபேசி அழைப்புகளை
எந்நேரமும் யாழ். நகரில் பெறுவதற்கு
மகாலட்சுமி ஸ்ரோர்ஸ்
212, ஸ்ரான்லி வீதி, யாழ்ப்பாணம்.
(பக்ஸ் அனுப்பவும் வசதிகள் உண்டு)
(சி-2164)

இப்பத்திரிகை நியூ உதயன் பப்ளிக்கேஷன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம், கஸ்தூரியார் வீதி 361 ஆம் இலக்கத்திலுள்ள அவர்களது பணிமனையில் 30-11-97 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org